செந்தமிழ்ச் செம்மல்

# நா. கதிரைவேற்பிள்ளை

க. சி. குலரத்தினம்

திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார்

செந்தமிழ்ச் செம்மல்

# நா. கதிரைவேற்பிள்ளை

க. சி. குலரத்தினம்

திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார்

*வெளியீடு:*

கதிரைவேற்பிள்ளை கலாமன்றம்

மேலைப்புலோலி, பருத்தித்துறை.

இலங்கை.

முதற்பதிப்பு : சூலை 1969

பிரதிகள் : 1000

விலை : ரூபா 1.60/=

வெளியீடு : கதிரைவேற்பிள்ளை கலாமன்றம்

அச்சுப்பதிப்பு: இரஞ்சனா அச்சகம்,
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு-13. (இலங்கை)

# வாழ்த்துரை

கோட்டை,
சென்னை-9.
16-6-69

புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.
பேரவைத் தலைவர்
தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை,

அன்புடையீர்,

வணக்கம்.

"தமிழ்த் தென்றல் திரு. வி. க." என்ற, நாடு போற்றும் நல்லுரையினைப் (திருவாளர் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள்) பெற்றுப் பெருமையுறப் பண்ணியவர், திருவாளர் நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் ஆவார்கள். கடல் கடந்த நாட்டில் இருந்தும் கன்னித் தமிழ் வளர்த்த, அப்பெரியார்க்குச் சிலை அமைக்கத் தாங்கள் மேற்கொண்டிருக்கும் நன் முயற்சி வெல்க! வாழ்க அப்பெரியார் புகழ்.

அன்பன்
கா. கோவிந்தன்

திரு. ஆ. தேவராசன்,
கௌரவ பொதுச் செயலாளர்,
கதிரைவேற்பிள்ளை கலாமன்றம்,
கதிரைவேற்பிள்ளை வீதி,
மேலைப் புலோலி,
பருத்தித்துறை,
இலங்கை.

# ஆசியுரை

கயப்பாக்கம் மு. சோமசுந்தரம்.

23, வேளாளர் வீதி,
அமைந்தகரை,
சென்னை-29.
13-6-69

அன்புடையீர்,

ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் சேய்நாட்டில் பிறந்து வளர்ந்து, தாய் நாட்டில் வந்து வளர்ந்து கல்விகற்றுப் பிறருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துப் பல அரிய நூல்களை இயற்றிப், பல வாதங்கள் புரிந்து, வெற்றி பெற்றும், பல உரைகளுக்கும் நூல்களுக்கும் கண்டனங்களும் மறுப்புகளும் எழுதியும், யாரும் செய்யாத தமிழ் அகராதி ஒன்றைத் தயாரித்து அச்சிட்டு உதவினதால் பேரறிஞர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றும், பல சைவசமயப் பிரசுரங்களைச் சென்னையில் செய்தும், சதாவதானம் செய்தும், புலவர் பெருமக்களால் பெரிதும் புகழப் பெற்றும் விளங்கி இளம்பிராயத்திலேயே இறையடியடைந்தார்கள்,

வாழ்க நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள்!

வளர்க அவர்தம் தொண்டுகள்!!

ஓங்குக அவர் புகழ்!!!

அன்புள்ள

கயப்பாகம் மு. சோமசுந்தரம்

# பதிப்புரை

ஆறுமுக நாவலர் தமிழின எழுச்சிப் பெருந்தகை — சைவநெறிக் காவலர். தமிழ் இலக்கிய வரலாற்றில், பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைக்குரியது என்று பம்மல் சம்பந்த முதலியார் கூறியுள்ளார். இந்த வரலாற்றுக் காலத்தின் பிதாமகர் நாவலர் என்பதில் ஐயமில்லை.

கல்வியினூடாகத் தமிழின எழுச்சியைத் தோற்றுவித்தவர் நாவலர். தமிழ்க் கல்வி, தமிழ்க் கருவூலங்கள் பாதுகாப்பு — இவை நாவலர் பணியின் அச்சாணி.

இதே வழியை அடியொற்றித் தமிழின எழுச்சிக்காகப் பாடுபட்டவர்தான் மேலைப் புலோலி சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள். நாவலர் எந்தப் பணிகளைச் செய்தாரோ, அந்தப் பணிகளைக் கதிரைவேற்பிள்ளை அவர்கள் பூர்த்தி செய்து பொலிவளித்தார். பேச்சு வன்மையில் நாவலருக்கு ஈடான நாவலராகத் திகழ்ந்தார்.

பல் வேறு துறைகளிலே பணியாற்றிப் பெருமை எய்தியவர் கதிரைவேற்பிள்ளை அவர்கள். அந்தப் பணிகளின் முக்கிய கூறுகளை சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார் இந் நூலாசிரியர் திரு. க. சி. குலரத்தினம் அவர்கள். திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் தமிழ் மொழியை அறிவுத் துறையில் மெருகூட்டி வளம் பெருக்கி வருகின்றார். அவருக்குரிய ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் நாவலர் வழிவந்த நாவலர், சதாவதானி, சைவசித்தாந்த மகாசரபம், மாயாவாத தும்சகோளரி, அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், அகராதிப் பேராசான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் பணிகளையும் ஆராய்ந்துள்ளார்.

நா. கதிரைவேற்பிள்ளை அவர்களுடைய மாணக்கரும், அவரிடம் கல்வி பயின்றதே தன் வாழ்க்கைப்பேறு, என்று பெருமை கொண்டவருமான திரு. வி. க. அவர்

கள், தனது குரு இறந்தபின் "நா. கதிரைவேற்பிள்ளை சரித்திரம்" என்றொரு நூலை 1908 இல் வெளியிட்டார். அதில் பல பயனுள்ள தகவல்கள் உண்டென்பதால் அதை மறுபிரசுரம் செய்து இதன் பின்னிணைப்பாக வெளியிடுகிறோம்; அதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழ்ப் பேரறிஞர் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களை இன்றும் தமிழகம் மறந்துவிடவில்லை என்பதை இந் நூலுக்கு ஆசியுரைகள் நல்கிய தமிழ் நாட்டுச் சட்டப் பேரவைத் தலைவர் (சபாநாயகர்) புலவர் கா. கோவிந்தன், எம். ஏ. அவர்களும், சித்தாந்த வித்தகர் சென்னை கயப்பாக்கம் மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் நினைவு படுத்துகின்றனர்.

இதற்கு மேலும் ஆதாரமாக இவ்வாண்டு சென்னையிலிருந்து நண்பர் க. குலநாயகம் அவர்கள் எனக்கு அனுப்பிய அஞ்சலின் ஒரு பகுதியையும் இங்கே தருகிறேன்.

"நாங்கள் பழனியில் நின்றபொழுது அங்கு கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. உள் கோவிலைச் சுற்றியுள்ள சுவர்களில் முருகனைப் பற்றிய காட்சிகளை ஓவியங்களாகச் சித்திரிக்கிறார்கள். இக் காட்சிகளை அமைப்பதற்கு யாழ்ப்பாணம் சதாவதானம் கதிரவேற்பிள்ளை அவர்கள் எழுதிய "சுப்பிரமணிய பராக்கிரமம்" என்ற நூலில் இருந்துதான் பாடல்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். 64 சித்திரங்களுக்கு பாடல்கள் தேர்ந்தெடுத்து ஓவியர்கள் வேலை செய்கிறார்கள். இப் பாடல்களைக் கொண்டுதான் காட்சி அமைக்க வேண்டுமென்று பழனி தேவஸ்தான சபைதான் தீர்மானித்துக் கொடுத்ததாகச் சொன்னார்கள். நான் அங்கு வேலை செய்யும் ஓவியர்களுடனும்,—காட்சி அமைப்புக் குழுத் தலைவருடனும் கதைத்து இது பற்றிய விபரங்களை அறிந்து கொண்டேன்."

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் பிறந்த ஆண்டைப் பற்றிச் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. 1844 ஆம்

ஆண்டில் அவர் பிறந்தார் என்று திரு. ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் தன் ''காலக் குறிப்பு அகராதி'' யில் குறிப்பிட்டுள்ளார். சுன்னகம் குமாரசாமிப் புலவர் அவர்களும் ''ஈழத்துப் புலவர் வரலாறு'' என்ற நூலில் 1844 என்றே குறிப்பிட்டுள்ளார். மயிலை சீனி. வெங்கடசாமி அவர்கள் தனது ''பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்'' என்ற நூலில் 1871 என்று குறிப்பிட்டுள்ளார். ''கதிரவேற்பிள்ளை சரித்திரம்'' என்று திரு. வி. க. எழுதிய நூலின் முன்னுரையில் 1860 என்று போட்டிருந்ததை 'அச்சுப் பிழை திருத்தம்'' என்ற இறுதிப் பகுதியில், 1871 என்பதே சரியென்று அழுத்தமாகத் திரு. வி. க. அவர்களால் திருத்தப்பட்டுள்ளது உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய ஒன்று. அது மட்டுமல்லாமல் பிறந்த நாள், குறித்து ஒரு பாடலையும் பாடியுள்ளார்.

> "சேர்பிர சோற்பதிப் பீடுறு மார்கழிப் பேசிரு நாள்
> கார்பிர கற்பநி வாரமுற் பக்கந லைப்பிசியிற்
> சீர்பிர சங்கம் பொழிகதி வைரவேற்
> சிறப்புடையோன்
> சார்பிர மன்னு வார் கடற் றரணி சார்ந்தனனே."


என்பது அந்தப் பாடல். இதன்படி பார்த்தாலும்-1871க்கான பிரசோற்பதி ஆண்டுப் பஞ்சாங்கமும் இதனை உறுதிப்படுத்துகிறது.

கதிரைவேற்பிள்ளைக்காகத் தன் வாழ்க்கையில் பல தியாகங்கள் செய்து அவரோடு நெருங்கிப் பழகியவர் திரு. வி. க. அவரைவிட அதிகார பூர்வமான தகவல்களை மற்றவர்கள் அறிந்திருக்க முடியும் என்று கொள்ள இடமில்லை. எனவே அன்னார் பிறந்த ஆண்டு 1871 என்பதில் ஐயப்பட இடமேயில்லை. நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மிக இளமையில் இறந்தார் என்பது பரவலாக வழங்கிவரும் வாய்மொழிச் செய்தி. இதுவும், அவர் பிற் காலத்தில் தான் பிறந்திருக்கலாம் என்பதை-அதாவது 1871 இல் பிறந்ததை ஆதரிக்கிறது. எனவே இத்துடன் இந்த ஐயத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பது சாலச் சிறந்தது.

இந் நூலினை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய இரஞ்சனு அச்சக உரிமையாளர் திரு ஆ. நடராசா அவர்களுக்கும், "நா. கதிரவேற்பிள்ளை சரித்திரம்" என்ற திரு. வி. க. எழுதிய நூலைப் பிரதி எடுக்க உதவிய யாழ்ப்பாணக் கல்லூரி நூலகருக்கும் எமது நன்றி உரியதே.

ஆ. தேவராசன்,
கௌரவ பொதுச் செயலாளர்

கதிரைவேற்பிள்ளை கலாமன்றம்,
மேலைப் புலோலி,
பருத்தித்துறை,
25.7.69.



செந்தமிழ்ச் செம்மல்

**நா. கதிரைவேற்பிள்ளை**

**1871 – 1907**

செந்தமிழ்ச் செம்மல்

# நா. கதிரைவேற்பிள்ளை

க. சி. குலரத்தினம்

# ஈழநாட்டினர் இன்தமிழ்த் தொண்டு

தமிழ் கூறும் நல்லுலகம் எனப் புகழப்பட்ட சேர சோழ பாண்டிய மண்டலங்களுடன் ஈழமண்டலமும் நெடும் பண்டைக்கால முதலாகத் தமிழ் கூறும் நிலப்பரப்பாகவே நிலவி வருவதாயிற்று. முதற் சங்க காலத்திலே முரஞ்சியூர் முடிநாகனுரும் கடைச் சங்கத்திலே ஈழத்துப் பூதந்தேவனுரும் கவியரங் கேறியிருந்த புலவர்கள் என்ப. சங்க காலத்துக்குப் பின்னரும் ஈழத்துப் புலவர் பலர் காலத்துக்குக் காலம் தமிழ் நாட்டுக்குச் சென்று ஆங்காங்குறைந்து தமிழ்த் தொண்டு செய்து வருவாராயினர். தமிழிலக்கியவிலக்கண வளர்ச்சிக்கு வரையாதுபகரித்த எம்நாட்டவர் பலர் தமிழ் நாடாய தாய் நாட்டிலேயே தங்காலத்தைக் கழித்துமிருக்கிறுர்கள். ஈழத்துப் புலவர் பரம்பரையினர் என்றென்றும் வாழையடி வாழையாக வரன்முறையாகத் தமிழ் வழங்கி வந்துள்ளார்கள். அண்மையில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டரங்கிலும் ஈழத்து இளம் புலவர் இருவர் கவியரங்கேறிப் பொற்பதக்கமும் பாராட்டும் பெற்றுள்ளார்கள்.

ஆறுமுகநாவலர் தமது இருபத்தாறும் ஆண்டுப் பராயத்திலே சென்னபட்டினஞ் சென்று செந்தமிழ் வளர்க்கவும் சுத்தாதுவித சைவ சித்தாந்தத்தைப் பரப்பவும் அச்சுக் கூடம் வாங்கியமையும், அதே ஆண்டிலே திருக்கைலாய பரம்பரைத் திருவாவடு துறையாதீன மகாசந்நிதானம் அவர்களால் உபசரிக்கப்பட்டு நாவலர்ப் பட்டமளிக்கப் பெற்றமையும், ஈழத்துக்குப் பெருமையேயாம். நாவலர் அவர்கள் பெரிய படிப்பாளியாக இருந்தோடமையாது நல்லாசிரியராயும், சைவப்பிரசாரகராயும், உரையாசிரியராயும், நூலாசிரியராயும் பதிப்பாளராயும் பள்ளிக்கூடத் தாபகராயும், தேசத் தொண்டராயும் தருமவாளுயும் வாழ்ந்தார். அவர் சைவப் பயிரை வளர்க்க வந்த சொல்லாறு என்றும், திருவுடைய தொண்டர் என்றும் சிவநேசச் செல்வர் என்றும் தமிழினைப் புதுக்க வந்த தத்துவப் புதல்வன் என்றும் பாராட்டப்பட்டவர். அவருக்கு முன்னோடியாக அவருடைய முந்தையோர் மரபில் வந்த ஞானப்பிர

காச முனிவர் என்பார் வடதேயம் முதலாகப் பாராட்டப் பட்டவராவர்.

தம் முன்னோடிகள் பலரைப் பின்பற்றிச் சேய்நாடாகிய ஈழத்துப் புலவர் பலர் தாய் நாடாகிய தமிழ் நாட்டிற் பிரகாசித்தார்கள். ஈழத்து ஒளிமணிகளுள் வட கோவை சபாபதி நாவலரும், உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரும் பாஸ்கர சேதுபதி மகாராசா அவர்கள் சமூகத்திற் பிரசங்கஞ் செய்தும், பிரபந்தம் பாடியும் தம் புலமையின் வலிமை காட்டிப் பரிசிலும் வரிசையும் பட்டமும் பெற்று ஈழத்துக்கும் தமிழ் பேசும் நல்லுலகத்துக்கும் என்றுமளியாப் புகழ் பெற்றார்கள்.

முன்னர்ச் சொன்ன முன்னோடியான ஞானப்பிரகாச முனிவர் இந்தியாவில் மிக வடக்கே காசிவரையுஞ் சென்று பௌட்கராகமத்துக்கு வடமொழியிலேயே உரையெழுதியதோடு சிவஞான சித்தியார் உரை, சிவஞானசித்தியார் விளக்கம், சிவஞானபோத விரிவுரை என்பனவற்றைத் தமிழிலும் எழுதியுள்ளார். இன்னும் வடமொழியிற் சிவயோக சாரம். சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை அஞ்ஞான விசேசனம், சிவயோகரத்தினம், சிவாகமாதி மகான்மிய சங்கிரகம் முதலாய பல நூல்களை இயற்றி அவற்றையெல்லாம் திருவண்ணமலை ஆதீனத்துக்கே காணிக்கையாகக் கொடுத்துச் சிதம்பரத்திலே தமது பெயர் விளங்க ஞானப்பிரகாசர் திருக்குளமுந் தொட்டனர்.

திருப்பெருந்திரு ஞானப்பிரகாச சுவாமிகளைப் பின்பற்றி ஆறுமுகநாவலரின் மாணவராய குப்பிளான் செந்திநாதையர் வடக்கே சென்று, காசியில் உறைந்து சைவ சித்தாந்தத்தைப் பேணி வளர்த்தார். அவர் தேவாரம் வேத சாரம், கந்தபுராண நவநீதம் முதலாய பல நூல்களைச் செய்ததோடமையாது, ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் அருளிச் செய்த பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியத்தைத் தமிழில் எழுதிப் பதித்தும் புகழ் பெற்றார்.

இன்னும் தமிழ் வளர்த்த தாமோதரனார், இராமாயண ரசனை வளர்த்த பொன்னம்பலபிள்ளை, சைவம் வளர்த்த சுவாமிநாத பண்டிதர், இலக்கணம் ஆராய்ந்த இலங்கணஞ் சுவாமியார், பரீட்சாதிகாரி இ. க. கனகசுந்தரம்பிள்ளை, பட்டதாரிப் பையன் கனகசபைப்பிள்ளை, சதாவதானம் கதிரைவேற்பிள்ளை முதலாய பேரறிஞர் பலர் தமிழ் நாட்டிற் பிரகாசித்தார்கள்.

தமிழ் நாட்டிற் சைவமுந் தமிழும் வளர்த்துப் புகழீட்டிய மேலைப் புலோலி சதாவதானம் கதிரைவேற்பிள்ளையவர்கள் பெருமை சொல்லுந்தரத்தன்று. நாவலர் அவர்களுக்குப் பின்னர் மிகுசைவத்துறை விளங்க அயராதுழைத்தவர்களுள் அவரும் ஒருவர். தமிழ் நாட்டிலிருந்து ஈழம் புகுந்த கனகசபாபதியோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளுக்கு ஈழத்திலே சேனாதிராய முதலியார், ஆறுமுகநாவலர், பொன்னம்பலப் பெயர் புட்கலாவர்த்தம் முதலாக மாணவர் பரம்பரை ஒன்றுவாழையடி வாழையாக வந்தமைந்தாற்போன்று வடக்கே சென்ற எம்மவரான கதிரைவேற்பிள்ளைக்கும் தமிழ்ப் பெரியார் கலியாணசுந்தர் முதலாய மாணவர் பரம்பரையொன்று அமைந்துள்ளது.

## திரு. வி. க. கண்ட கதிரைவேற்பிள்ளை

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தமது வாழ்க்கைக் குறிப்புக்களிற் கல்விப் பகுதியில் எழுதியுள்ள வாசகம் படிப்பவர் மனதைக் கவருந் தன்மையது. அன்னார் எழுதியுள்ள வாசகத்தை அட்சரம் தவறாமல் இங்குத் தருகிறோம்.

''முதன் முதல் எனக்குக் கல்விக் கண் திறந்தவர் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை. அவர் தம் பெரும் பொழுது சமயவாதங்களிலும், கண்டனங்கள் வரைவதிலுஞ் செலவாயிற்று. குறிப்பிட்ட நேரத்தில் மாணாக்கர் அவரிடத்தில் தமிழ் பயிலுதல் இயல்வதில்லை. ஓய்வு கிடைக்கும் எந்த நேரத்திலும் அவர் பாடஞ் சொல்

வர். எவ்விடத்திலுஞ் சொல்வர். அவரது வாதப் பேச்சுக்களிலுந் தமிழ் மணங் கமழும், கலைமகள் நடம் புரிவள், மாணக்கர் ஐயப்பாடுகள் பல நீங்கும்.

கதிரைவேற்பிள்ளையினல் தமிழ்த் தொண்டு பொதுவாகச் சென்னையிற் பல இடங்களில் நடைபெறும். சிறப்பாகக் குறிக்கத்தக்க இடங்கள் இரண்டு. ஒன்று கந்தசுவாமி கோயில் வசந்த மண்டபம், மற்றது சிந்தாதிரிப்பேட்டை அக்காள பரமேசுவரி கோயில் நிலையம். அங்கே ஞாயிறு தோறும் தணிகைப் புராணஞ் சொல்லப்பட்டது. இங்கே செவ்வாய் தோறும் கந்தபுராணமும், வெள்ளி தோறும் திருவிளையாடற் புராணமுஞ் சொல்லப்பட்டன.

யான் தவருமல் இரண்டிடங்களுக்குச் செல்வேன். இரண்டும் வெறும் புராண பிரசங்க மேடைகளாயிரா. அவை கலைக்கழகங்களாகத் திகழும். கதிரவேலரின் சொன் மாரி வெள்ளத்தில் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், சாத்திரம் முதலியன தேங்கும். அத்தேக்கம் மாணக்கர்க்குக் கலைவிருந்தாகும்.

கதிரைவேலர் பல திறவாதக்கடல்களைத்திறந்துமாணக்கர்க்கு நன்முறையிற் பாடஞ் சொல்ல உளங் கொண்ட வேளையில் எங்கள் துரதிஷ்டம் அவரை நீலகிரிக்கு ஏகச் செய்தது. யான் உற்ற துயரை ஈண்டு எழுத்தால் எழுதல் இயலவில்லை. அவர், "வேனிற்கால விடுமுறையிற் சென்னைக்கு வருவேன்" என்று எனக்குக் கடிதம் எழுதுவர். அஃது எனக்கு ஆறுதலளிக்கும். வேனிற்காலத்தை விரைந்து விரைந்து எதிர்பார்த்தவருள் யான் முதல்வனயிருப்பேன். வேனிற்காலம் வந்தது. கதிரைவேற்பிள்ளையுஞ் சென்னை சேர்ந்தனர். இரண்டு திங்கள் சிந்தாதிரிப்பேட்டையில் தங்கினர். யாப்பிலக்கணப் போதனையே பெரிதும் ஆசிரியர் விடுமுறையை விழுங்கியது. இடையிடையே பெரிய புராணங் கேட்பேன். தமிழாசிரியர் மீண்டும் நீலகிரிக்கேகினர். கதிரைவேற்பிள்ளைக்கு யான் பாட்டாற் கடிதம் எழுதுவேன். அவர் மகிழ்ந்து மகிழ்ந்து பாட்டிலேயே பதில் விடுத்து ஊக்கமூட்டுவர். எனக்குக் கல்விக் கண்

திறந்த ஆசிரியர் நீலகிரியில் வெஞ்சுரத்தாற் பீடிக்கப்பட்டார் என்ற செய்தி சென்னைக்கு எட்டியது. தொடர்ந்து ஆண்டவன் திருவடி நீழலடைந்தார் என்ற செய்தி சென்னைக்கு எட்டியது. யான் துன்பக் கடலில் வீழ்ந்தேன். அக்கடலினின்றும் ஏறப் பன்னெடு நாட்களாயின.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தாம் நூதனமா யெழுதிய பெரிய புராணவுரைப் பதிப்பின் முகவுரையில் தமது குரு கதிரைவேற்பிள்ளை அவர்களைப் பற்றி எழுதிய பகுதி வருமாறு :

''சென்னை வெஸ்லி கலாசாலையில் யான் மாணாக்கனா யிருந்தபோது யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களது அன்புக்குரியவனானேன். ஆங்கிலத்திற் பித்துக் கொண்டு திரிந்த எனக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவர். அவரிடம் நான் நெருங்கிப் பழகி வந்தபோது, பெரிய புராணத்தைப் படிக்குமாறும், நாயன்மார் வரலாறுகளை உரைநடையில் எழுதி எழுதிப் பயிற்சி பெறுமாறும் அவர் எனக்கு அடிக்கடி சொல்லி வருவர். அவ்வாறே யான் பெரிய புராணத்திற் சிறு தேர் உருட்டியும், சிற்றில் கட்டியும் விளையாடி வந்தேன். அவ்வப்போது அரும்பதங்கட்கு உரை குறித்துக் கொள்வதுமுண்டு. நாயன்மார் வரலாறுகளை உரைநடையில் எழுதுவதுமுண்டு.

கதிரைவேற்பிள்ளை சென்னை விடுத்து நீலகிரிக்கேகித் தமிழ்த் தொண்டு செய்தபோது சிவனடி சேர்ந்தனர். தமிழிலுள்ள பேரிலக்கிய இலக்கணங்களையும், ஞான நூல்களையும் முறையாகப் பயிலுதல் வேண்டுமென்ற அவா என்னைப் பிடர் பிடித்து உந்திக் கொண்டே இருந்தது... கதிரவேற்பிள்ளை கட்டளையிட்டவாறு பயிற்சியின் பொருட்டு யான் எழுதிய அரும்பதவுரையுடனும், வசனத்துடனும், பெரிய புராணத்தைச் சஞ்சிகை சஞ்சிகையாக வெளியிட முயன்றனர்......

இனித் திரு. வி. க. அவர்கள் எழுதிய உரிமையுரையையும், அவர் உரிமை செய்த நேரிசையாசிரியப்பாவின் நேர்மையையும் ஈண்டுக் காண்பாம்.

"இத்துணைச் சிறப்பினையுடைய அருமருந்தன்ன இத் திருத்தொண்டர் புராண மூலத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பிரதிக்கிணங்கப் பரிசோதித்து, அதனுடன் அடியேனியற்றிய அரும்பதக் குறிப்புரையையும், வசனத்தையுஞ் சேர்த்து, 1871 ஆம் ஆண்டிலே அமிழ்தினுமினிய தமிழ் ஈழநாட்டிலே அவதரித்து, அருட்பா வென்பது ஆறிரு முறையே என்று அரசமன்றமேறிப் பசுமரத்தாணி போல் நாட்டி முன்னர் தில்லையம்பதியில் நடைபெற்ற மகோற்சவத்தை இக்காலத்து மக்கள் கண்டு இன்புற்றுய்ய அத்தில்லையிலுனும் பிறபதிகளினும் இனிமையாய் நடாத்திக் காட்டி, 1907 ஆம் வருடத்திலே சிவனடி சேர்ந்த சதாவதானம், ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் ஞாபகசின்னத்திற்காக வெளியிட்டுத் தங்கள் குருபக்தியை விளக்கினார் என் தமையனார் திருவாரூர் வி. உலகநாத முதலியாரும், என் கெழுதகை நண்பரும் உழுவலன்பரும் ஆகிய அ. சிவசங்கரமுதலியாரும்.

## சிவநூலிதனை

முத்தமிழ் நாளும் தந்தைக ளோம்பும்
அருட்பா திருப்புகழ்ப் பொருட்பா ஓதையும்
நலமணி ஒலியின் மலரணி பிணியும்
மலர்முக மணியணி நலவெரி உமிழ்வும்
நீங்கா தொளிரும் பாங்குறு நாடு
காவலர் போற்றுங் கூவலர் நாடு
அமிழ்தினு மினிய தமனிய நாடு
செய்தவ மொன்றுய்த் திரண்ட உருவென
ஆன்றவர் குணமொடு தோன்றின னெனவனே
நாவலர் மாணவ நாரலை படிந்தே
உகந்திரு மொழிநீர் முகந்துருள் புடவி
அந்தமிழ்ப் பேரக ராதியுங் கூர்ம
புராண சிவநிசி புராண உரையும்
சைவ பூடண சந்திரி கையும்
குகபராக் கிரமமு மிகநூ லாக

உதவிய மழையெனும் உத்தம னெவனே
செந்தமி ழணங்கின் சிந்தைதயி லென்றும்
தங்குந் தமிழொளித் துங்கவ னெவனே
சாலி வாணிமா சூலியைப் புரையும்
கற்புயர் கல்வி பொற்பருண் ஞானம்
கொண்டுமெய் யன்பிற் கோமகள் பேயார்
எனவே வளர்ந்து வனவே டச்சிதே
அத்தியை என்றும் புத்தியிற் போற்றும்
வடிவாம் பிகையெனும் வடிவினை மணந்தே
இல்லற மேற்ற நல்லவ னெவனே
தெய்வ வைதிக சைவசித் தாந்த
சண்டமா ருதப்பேர் கொண்ட நஞ்சோம
சுந்தர நாதன் சுந்தர னையபின்
அவன்போற் செழித்தவன் சிவநெறி எவனே
நாஞ்சிவ மென்றே ஆஞ்சிடுங் கரிகள்
வீரிட லாட்டிப் பாரிடர் களைந்து
மாயா வாத தும்சகோ ளரியெனும்
காந்திசேர் பட்டம் எய்தின னெவனே
மன்னவர் நீதி மன்றினி லேறிப்
பன்னிரு முறையே உன்னருட் பாவென
ஆணி பசுமரத் தறைந்தா லென்னக்
காட்டிச் சாத்திரம் நாட்டின னெவனே
சிற்றம் பலத்தினும் மற்றைத் தலத்தினும்
வளவ னடாத்திய வளமார் திருமுறை
விழாவை இந்நாள் வளாமல் நிகழ்த்தி
உண்மை யருட்பா வண்மையை முன்போல்
எங்கணும் பரப்பிய கங்கண னெவனே
அருவி கண்களிற் பெருகிட அன்பே
உருவா யானந்தப் பெருவா ரிதியில்
திளைக்கவும் நேயர்கள் வளைவிலாக் கல்விப்
பண்டித ரீண்டிக் கண்டிலம் யாண்டும்
இவனிற் புலவரை இவனது சொல்லிசை
என்றிமை யோராய் நின்றிட ஒன்னார்
அகத்திற் புகழ்ந்து முகத்தைச் சுளிப்பத்
தன்னை மறந்ததுந் தானறி யாமல்

பிரசங்க மாரி பெய்தவ னவனே
தென்தமிழ் வளர்த்த தொன்மது ராபுரிச்
சங்கப் புலவனைச் சார்ந்தவ னவனே
நல்லிசைப் புலவர்முன் சொல்லிசைச் சதாவ
தானஞ் செய்த வானவ னவனே
அடக்கம் பொறையை நடக்கையிற் காட்டி
இல்லா ருள்ளார் ஒல்லா லொல்லுநர்
ஒக்கவே நோக்கி மிக்கவ னவனே
அக்க மணியரை ஒக்கலெனக் கொண்
டுரியவ ரிகந்த பெரியவ னவனே
நாடவர் பழித்துரை பூணது வாகத்
துலக்கிய வாசக இலக்கிய னவனே
பற்றினார்க் கினிய பண்டித னவனே
எம்மைவிட் டகலாச் செம்மைய னவனே
நஞ்சனை கண்ட நாயக னவனே
கதிரவே லென்றொரு மதுரப் பெயருடைத்
தவன னவனே அவனது ஞாபக
சின்னம தாகச் செய்தனம்
உரிமை உலகமும் உவந்திட இனிதே.

## கதிரைவேற்பிள்ளையும் கதிர்காமக்கலம்பகமும்

கதிர்காமக் கலம்பகம் என்னும் நூல் ஸ்ரீ சரஸ்வதி பீடம் கந்தப்ப சுவாமிகளாற் பாடப்பட்டது. அந்நூல் செல்லரித்து மறைந்து விடாவண்ணம் பாதுகாத்துதவிய பெருமை கதிரைவேற்பிள்ளையவர்களுக்கே யுரியது. பிள்ளையவர்கள் அந்நூலைப் பழுதறப் பரிசோதித்து மதுரை - பாதரக்குடி திரு. ஆ. சொக்கலிங்கம்பிள்ளையின் பொருளுதவி கொண்டு சென்னை றிப்பன் அச்சகத்திற் பதிப்பித்து வெளியிட்டார்கள். அப்பதிப்பிற் பிள்ளையவர்கள் எழுதியுள்ள முகவுரை பயில்தொறும் இன்பம் பயப்பதால் அதனை யீண்டுக் காண்க.

''அநாதி மலமுத்தராய், ஆதிமத்தியாந்த சமனாதிக நாமரூப குணரதிகராய், சர்வஞ்ஞ சர்வகர்த் தத்துவ சர்

வாநுக்கிரக அதிபரமாப்த பதியாய் விளங்கா நின்ற சிவ குகக் கடவுள் நல்லசுரர் மேற் குழைந்து, வல்லசுரரைக் களைந்துதொல்பதத்திருத்துவான் திருவுளங் கொண்டுபடையுடனடந்து உவகையோடுந் தங்கியருளிய பாடிவீடான ஏமகூடம் எனப் பகர்தற் கிலக்காய் நிற்பதும், அடைந்தவர்களது மாசுகளைத் துடைத்துத் தூய்மை செய்யும் மாணிக்க கங்கை என்னும் மகாநதியினையும், சோதி வடிவமாயுள்ள திருக்கோயிலையும், கதிரைமலை முதலிய பர்வதங்களையுங் கொண்டிருப்பதும், அரிபிரமேந்திராதி அமரர்களாலும், அகத்தியாதி முனிவர்களாலும் பூசிக்கப்பட்டதும், கண்டியிலிருந்து அரசாண்ட பாலசிங்க மன்னனின் தந்தையும், சோழராசாவின் மருமகனும்மாகிய நரசிங்க நரேந்திரன் வசித்து வழிபட, அவற்கிட்ட சித்தியை, அளித்த தானமாயுள்ளதும், சிவசுப்பிரமணியக் கடவுளின் திருவருட் பெருஞ் செல்வராகிய அருணகிரிநாத சுவாமிகளால் திருப்புகழ் புனையப் பெற்றதும், குன்றுதொறாடற் பதிகங்களுள் ஒன்றாய் மகாமகிமையுற்றதும், பாபயுகமாகிய இக் கலிகாலத்தும் மெய்யன்பர் பொருட்டாகப் பற்பல திவ்வியாற்புதங்கள் நிகழப் பெறுவதும், மாண்பினையுடைய மேருகிரியின் பொற்சிகரம் பொருந்தப் பெற்றமையால் பொன்னகரம், ஈழம் எனச் சிறப்புப் பெயர்களை வகித்த பல்வளம் படைத்த இலங்கைத் தேசத்திலே மகேந்திரக் கடல் என வழங்கும் சமுத்திர சமீபத்திலே இலங்குவதுமாகிய திருக் கதிர்காம க்ஷேத்திரத்தின் விசேட பிரபாவத்தைத் தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் ஒன்றாக கலம்பகம் என்னும் பிரபந்தத்தாற் றெரித்தவர் ஸ்ரீசரஸ்வதிபீடம் — கந்தப்ப சுவாமிகள் என்பவரேயாம்.

யாழ்ப்பாணத்திலே அவதரித்துச் சுப்பிரமணிய பத்தியில் இஷ்டமுடைய இத்தவ நிலையினர், தமக்கு உற்ற கொடுநோய் நிவாரண நிமித்தம் ஆங்காங்குள்ள சிவகுக தல தீர்த்த மூர்த்த சேவை செய்தும் அது விமோசனமாகாமையாற் பெரிதும் வருந்திப் பின்னர், ஆறுமுகப் பெருமானது ஆஞ்ஞை மேற்கொண்டு கதிரை க்ஷேத்திரமடைந்து மணிநதி மூழ்கித் தரிசித்த மாத்திரத்தே அவ்வாதனை யகலப் பெற்று, அன்பின் மேலீட்டால் இப்பிரபந்

தத்தையும் பூர்த்தியாக்கி, மலபரிபாகம் வர தலை நிலையான திருவடி முத்தி பெற்றனர் என்பதே அவர் சரிதமாய்த் தெரிந்தவாம் என்க.

இம் மேலவராற் செய்யப்பட்ட இப் பிரபந்தமானது, கொச்சகக் கலிப்பாவும், வெண்பாவும், கலித்துறையும், முதற் கவியுறுப்பாகமுற் கூறப்பெற்று புயவகுப்பு, மதங்கு, அம்மனை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், வாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டுறுப்புக்களும் இயைப மடங்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னுமிவற்றுள் இடையிடையே வெண்பாவும் விரவிவர அந்தாதித் தொடையான் முற்றுறப் பெற்றமையாற் கலம்பகமெனக் காரணக் குறிகொண்டு சொன்னோக்கம், பொருணோக்கம், தொடைநோக்கம், நடைநோக்கத்தோடு எந்நோக்கமும் காண்டற்கு இலக்கியமாய் நிலவுவதன்றி, அன்பருளீந்து தத்துவஞானத்தை நிலைப்பித்து, சீதரற்குங் கிட்டாத திருவடிப் பெருவாழ்வையுங் கொடுக்குங் கருவாகவுந் திகழ்தலாற் சிறியேன் அப்பெரும் பயனைச் சிந்தித்த சில கனவான்களின் வேண்டுகோட்படி, எடுப்பாரும் படிப்பாருமின்றிப் பாணவாய்ப்பட்டு ஆங்காங்கு சிதைந்து கிடந்தனவற்றை யெல்லாம் ஒருவாறு இயைந்தனவாக்கி, பிரசுடனஞ் செய்தேன் ஆகலின், பெரியோர்கள் குறைநோக்கமே சீரியதெனப் பாராட்டல் அவரது பேரருங் கடனேயாம்.''

இங்ஙனம் பிள்ளையவர்கள் அரிதிற் பதித்த கதிர்காமக் கலம்பகத்துக்குப் பரிதிமாற் கலைஞன் என்னும் சூரிய நாராயண சாஸ்திரியார் மனமுவந்துதவிய சிறப்புப் பாயிரம் ஈண்டுப் படித்தின்புறற் பாலது.

## நேரிசை வெண்பா

கந்தப்பர் செய்த கதிர்காமக் கலம் பகத்தை
சந்தமொடு மச்சிட்டான் சால்புறவே - சந்ததமுங்

கந்தனடி பேணுங் கதிரைவேற்பிள்ளையெனு
மந்தமிழ்ப்பா வாணனினி தாய்ந்து

## நூலாசிரியர் கதிரைவேற்பிள்ளை

பிள்ளையவர்கள் பதிப்பாசிரியராக மாத்திரம் இருந்து விடவில்லை. அவர் சந்ததமுங் கந்தனடி பேணுங் கதிர் வேற்பிள்ளையாகலிற் தம்மைத் தடுத்தாட் கொண்ட தடங்கருணைப் பெருங்கடலாகிய கந்தசுவாமியாரின் வல்லமையைக் குறிக்கும் சுப்பிரமணிய பராக்கிரமம் என்னுஞ் சைவாக மக்களஞ்சியத்தை எழுதினர். அந்நூல் 1922 ஆம் ஆண்டுக்குச்சரியான பராபவ வருடத்து ஆனி மாதத்து இருபத்திரண்டாந் திகதி வெளிவந்தது. அதன் முகப்பில் எழுதப்பட்ட வாசகம் வருமாறு.

உ
சிவகுகமயம்
புதுச் சந் நிதிக்கந்தன் துணை

## சுப்பிரமணிய பராக்கிரமம்

காஞ்சிபுரம் ஜமிந்தாரும்
திருவேகம்ப நாத சுவாமி தேவஸ்தான
தர்மகர்த்தருமாகிய
கா. மு. சுப்பராய முதலியார் அவர்கள்
விரும்பியபடி
யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி
மகாவித்துவான் ஸ்ரீலஸ்ரீ
நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்
இயற்றியது.
சென்னைக் குயப்பேட்டை
பி. நா. சிதம்பர முதலியார் அண்டு பிரதர்ஸ் அவர்களது
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற் பதிக்கப்பட்டது.

1922 விலை ரூபா 2-00

பிள்ளையவர்கள் சுப்பிரமணிய பராக்கிரமத்தை எழுதுவதற்கு ஆதாரமாக எண்பது தமிழ் நூல்களையும் எண்பது வடமொழி நூல்களையும் எடுத்தாண்டுள்ளார் என்பதை அறியும் போது அவருடைய அறிவித்திறனை என்னென்பது. அவர் எண்பத்தெட்டுத் தலையங்கங்களில் ஐந்நூற்றுக்கு அதிகமான பக்கங்களில் அந்நூலை எழுதினுர் என்றுல் அவருடைய சமயப் பற்றும், முருகப் பெருமானிடத்து அவர் கொண்ட பக்தியும் எவ்வளவினதென எம்மனோரால் எடுத்தியம்பவும்படுமோ?

பிள்ளையவர்கள் தாமெழுதிய சுப்பிரமணிய பராக்கிரமத்தின் உபோற்காதத்திற் கூறிய வாசகம் தருக்க ரீதியாகவும் ஆற்றெழுக்குப் போன்றதாயும் இருப்பதால் அந்நடையினை அறிந்தின்புறற் பொருட்டு அதில் ஒரு பகுதியை ஈண்டுக் காண்போம்.

''சுப்பிரமணியக் கடவுளின் பிரபாவங்கள் மன வாக்கு கட் கெட்டாதன. அவற்றினிலொரு சிறிதே யான் மாக்களெல்லாம் உய்யும் பொருட்டு வேத சிவாகம புராணேதிகாச முதலியவற்றிற் கூறப்பட்டவை. தமிழ்ப் பண்டை நூற்கண்மாட்டு முருகனே கடவுளாக அறையப்பட்டுள்ளது. ஐந்திணைகளுள் முதற்றிணையாய் கூடலானேயின்ப முறுத்தவல்ல வத்துணைச் சிறப்புடைய குறிஞ்சி நிலத்துக்குச் தெய்வஞ் சுப்பிரமணியனே யென்று அகத்தியம், தொல்காப்பிய முதலிய கூறலால் தமிழ் நாட்டுத் தெய்வம் அவரேயென்பது தெளிவாம். அதனுலன்றே செந்தமிழ்ப் பரமாசாரியரும், தமிழர் கடவுளுமவரெனத் தெளிந்தொழுகி வழிபட்டார் ஆன்றேர். வடக்கட் சுப்பிரமணியத் தலங்கள் மல்கிக் காணுது தெற்கட் காணப்படுவது மிதனை வலியுறுத்து மாயிட்டு.

அம் மகாசங்கர காரணன் யாவனே என்று ஆயுழி தோற்றக் கேடுகளில்லானெவனே வவனே சங்கார காரணனகிய பரம முதல்வனென்று வேதசிவாகமங்களாகிய அருனூல்கள் கூறுநிற்கும். அவனைப் பரமசிவன் என்னும் விசேடப் பெயரால் அழைப்ப பெரியோர். ஆகவே சிவபெருமான் ஒருவரையே பரமபதி யெனக் கொள்வது சித்தாந்த

மாகவும், ஈண்டு சுப்பிரமணியக் கடவுளைப் பரப்பிரமமென் பது முரணுவோ வெனின் அற்றன்று. சிவபெருமானே தேவியார்க்கு உபதேசிக்குங் காலைத் தாமே குகன் எனவும் குகன் தாமே எனவுங் கூறியருளி யுண்மையைத் தெரித் தருளலா லன்றென்க.

இதுகாறும் பிள்ளையவர்களுடைய வசனநடையின் வன் மையைக் கண்டோம். இனி அவர் சுப்பிரமணிய பராக்கிர மத்திற்றுனே எழுதியுள்ள பாடல்களிலொன்றைப் பார்ப் போமாக.

இடந்தானு முணராளை யின்முருகை யெல்லாங்
கடந்தாளை அருளாந்தன் கடலாளை வேல்கைக்
கிடந்தாளை யெப்பொருளுங் கிடப்பாளைச் சூர்க்கா
நடந்தாளை யேத்தாத நாவென்ன நாவே
நம்பரளை யேத்தாத நாவென்ன நாவே.

இச் செய்யுளின் சந்தம் ஒசை என்பன அமைந்துள்ள அமைப்பைப் பார்க்கும்போது இளங்கோவடிகள் யாத்த பாடலோ இதுவென ஐயுறத்தக்கதாக இஃது அமைந்துள் ளதைக் காணலாம். பிள்ளையவர்களுடைய கவிதா சக் தியை மேலும் அறிவதற்கு அன்னுரியற்றிய சில க்ஷேத்திரா லய மகோற்சவ விளக்கம் என்னும் நூலின் அவையடக்கத் தில் அவர் யாத்துள்ள பாடல்களில் ஒன்றைப் படித்துப் பார்ப்போமாக.

## கட்டளைக் கலிப்பா

நல்ல யாழ்ப்பாண மேலைப்பு லோலியி
  ளுறு மெங்கட் கருள்செய வந்துறை
செல்வ ளுரும் கதிரையில் வேலவன்
  சீரடித்துணை செய்துணை யாலுல
கல்ல லோட லறிவில ளீங்கிதை
  யாற்றி னேன்குறை யாண்டிட லீங்கிது
மல்கு நந்தர மணிவிளக் காயெழ
  மாசிலெந்தை யருடுன்று முண்மையே.

# பிள்ளையவர்கள் இளமைக்காலம்

யாழ்ப்பாணத்து மேலைப் புலோலியில் வாழ்ந்த நாகப்பிள்ளை என்னும் பெரியார் முருகப்பெருமானிடத்துப் பேரன்பு பூண்டவர். அவருடைய மனைவியார் சிவகாமி அம்மையார் வயிற்றில் 1871 ஆம் ஆண்டுக்குச் சரியான பிரசோற்பத்தி வருடத்து மார்கழி மாதத்து மூன்றும் நாள் கதிரைவேற்பிள்ளை அவர்கள் பிறந்தார்கள். அயலில் உள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் தமது ஆரம்பப் படிப்பைப் பெற்ற பிள்ளையவர்கள் ஆறும் வகுப்புக்கு மேல் படிக்கமுடியாதவாறு வறுமை அவரை வாட்டியது.

படிப்பில் மகாவிவேகியும் அதிலே தளராத விருப்பும் அதிலே அளப்பரிய ஆற்றலும் வாய்ந்தபிள்ளையவர்கள் இளமையிலேயே ஏதாவது தொழில் செய்து பணந்தேட வேண்டிய நிர்ப்பந்தத்தால் அவ்வூரிலிருந்த நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளைக்கு எழுதுவினைஞராய்க் கடமையாற்றினார்.

ஓரளவிற்குச் சுதந்திரமாக வாழும் நோக்கங்கொண்ட பிள்ளையவர்களுக்கு நொத்தாரிசு வீட்டில் எழுதுவினைஞராய் இருப்பதில் ஊக்கங் குறைந்தது. அதனால் அவரை விட்டு விலகிச் சிலகாலம் தமது அயலில் உள்ள பாடசாலையொன்றில் உதவி ஆசிரியராய்க் கடமையாற்றினார். அக்காலத்திலே தான் பிள்ளையவர்களுக்குத் தாம் கற்றவை கைமண்ணளவு கூடவில்லையே என்ற ஏக்கமும் மேலும் பல நூல்களை ஐயந்திரிபறப் பெரியார்வாய்க் கேட்டறிதல் வேண்டும் என்ற விருப்பும் உண்டாயின. எனவே, தமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தமிழ் நாட்டுக்குப் பிரயாணமாயினார். அப்போதவருக்கு இருபத்திரண்டு வயதென்பர்.

# பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டு வாழ்க்கை

அக்காலத்திலே தான் தமிழ் நாட்டிலே தி. க. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் குன்றின் மேல் இட்ட சுடர் போல

ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தார். தமிழ் கற்கப் புகுவார்க்குக் கலங்கரை விளக்கம் போலிருந்த கனகசுந்தரம்பிள்ளையவர்களிடம் கதிரைவேற்பிள்ளை அண்டினார். நாளடைவில் தொல்காப்பியம் சங்கவிலக்கியம் முதலான அருங்கலை நூல்களை வேறும் பல வித்துவான்களிடம் பாடங்கேட்டு விற்பத்திமானாயினார். செந்தமிழ் இலக்கணத்தையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் நுணுகியாராய்வதற்கு இன்றியமையாத வடமொழியையும் கற்று அதிலே ஆழ்ந்த புலமையெய்தினார்.

பிள்ளையவர்கள் சென்னையிற் கல்வி கற்ற காலத்திலே சென்னை றிப்பன் அச்சகத்தின் அதிபராகிய சிவசங்கரன் செட்டியாரின் பழக்கத்தால் அவ்வச்சுக்கூடத்திலே அச்சுத்தாழ் திருத்தும் வேலைபார்த்துவந்தார். அவ்வச்சகத்தினின்றும் வெளியிடப்பட்ட நூல்களில் அச்சுப்பிழை இல்லாமைக்குக் காரணராய் இருந்தவர் கதிரைவேற்பிள்ளை அவர்களேயாவர். பின்னர் 1897 ஆம் ஆண்டு முதலாக ஆசிரியர் வேலை கிடைக்கப்பெற்று முதலில் வேப்பேரி உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர் சென் தோம் உயர்நிலைப்பள்ளியிலும் ஆசிரியராய்க் கடமையாற்றுவராயினர்.

சிறந்த ஆசார சீலரும் அறிவுத்திறனும் வாய்ந்த பிள்ளையவர்களின் கற்பித்தல் முறை மாணவரை வெகுவாகக் கவர்ந்தது. அதனால் தமிழ்ப் பெரியார் எனச் சைவத் தமிழ் உலகம் போற்றும் திரு. வி. க. என்னுங் கலியாணசுந்தர முதலியாரும், அவர் உடன் பிறந்தார் உலகநாத முதலியாரும் பிறரும் பிள்ளையவர்களின் மதிப்புக்குரிய மாணவ சிரோமணிகளாயினர். திரு. வி. க. அவர்கள் எங்கள் குருநாதன் இவ்வாறு கூறுவார்கள் என்று அடிக்கடி மேடைப் பிரசங்கங்களிற் கூறுவது வழக்கமாயிருந்தது.

பிள்ளையவர்கள் தமது ஓய்வு நேரங்களிற் சென்னைக் கந்தகோட்டத்து வசந்த மண்டபத்திலேயும், சிந்தாதிரிப் பேட்டை அம்மன் கோயில் மண்டபத்திலும் அரிய சமயப் பிரசங்கங்கள் செய்வாராயினர். இவர் தணிகைப் புராணமும் கந்தபுராணமும் ஒழுங்காகப் பிரசங்கஞ் செய்து வந்த

காலத்திலே மாயாவாதத்தை இவர் தாக்கி உண்மைச் சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தை நிலைநாட்டினார். இவருடைய சீரிய தொண்டினைப் பாராட்டிச் சென்னையில் ஒரு மாபெருங் கூட்டத்திலே ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்கள் தலைமையிலே இவருக்கு மாயாவாத தும்ச கோளரி என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து சைவத் தமிழன்பர்கள் தமிழ் நாட்டிற் பல இடங்களிலும் பேரவைகூட்டிப் பிள்ளையவர்களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வித்து மேலும் பல விருதுகளும் பட்டங்களும் வழங்குவாராயினர். சைவசித்தாந்த மகாசரபம், அத்துவிதசித்தாந்தமகோத்தாரணர், மகாவித்துவான், நாவலர், பெருஞ்சொற் கொண்டல் என்பன போன்ற எண்ணிறந்த பட்டங்கள் பிள்ளையவர்களின் பெயரை மொய்த்தன. ஆரணி சமஸ்தான வித்துவானாய் இவர் அவ்விடத்தை அலங்கரித்த காலத்திலே தான் அவ்வாதீனத் தலைவர் இவருக்கு அத்துவித சித்தாந்த மகோத்தாரணர் என்னும் பட்டத்தை நல்கினார் என்ப.

## உரையாசிரியர்

சுதந்திரமாய் ஒருவருக்குங்கட்டுப்படாது வாழ விரும்பிய பிள்ளையவர்களுக்கு ஆசிரியர் வேலையும் தடையாய் இருந்தமையால் அதனையும் அவர் உதறித்தள்ளிவிட்டு நூல்களுக்கு உரையெழுதுவதிலும் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபடுவாராயினர். சிவசேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசிப் புராண அரும்பதவுரை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறுமுதலாயநூல்கள் அவருக்குப் பெரும் புகழை யீட்டிக்கொடுத்தன. இவற்றை விடப் பழனித்தலபுராணம், திருவருணைக் கலம்பகம், சிவராத்திரிப் புராணம் முதலியவற்றுக்கும் தெளிவான விருத்தியுரையெழுதினார். இவர் அதிவீரராமபாண்டியன் இயற்றிய தமிழ்க் கூர்மபுராணத்துக்கும் அரியதோருரை எழுதியுள்ளார்.

புலவர்க்கு ஔடதமெனப் போற்றப்படும் நைடதத்துக்குப் ஓர் ஆராய்ச்சியுரையெழுதிய பிள்ளையவர்களின் புலமையைப் பாராட்டாதவர்கள் இல்லை என்றே கூறலாம். அப்பதிப்பின் முகப்பிற்கண்ட வாசகம் வருமாறு.

சிவமயம்

அரசகுல திலக புலவரேறு
அதிவீரராமபாண்டியனூர் இயற்றிய
நைடதமூலமும்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
மாணக்கருக்கு மாணக்கரும்
மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும்
அத்துவித சித்தாந்த மகோத்தாரணரும் ஆகிய
யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி
மகாவித்துவான்
நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்
புதுக்கியும் திருத்தியும் விளக்கியுஞ்
சேர்த்துக்கொடுத்த
விருத்தியுரை
சென்னை
வித்தியாரத் நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

நைடதப் பதிப்பின் நாந்தியுரையிற் பிள்ளையவர் கூறியவை அவருடைய பளிங்கு போன்ற இருதயத்தைப் படம்பிடித்துக் காட்டுவனவாய் உள்ளனவாதலால் அவற்றில் ஒரு பகுதியை ஈண்டுக் காண்போம்.

''இந்நைடதத்திற்கு மகாவித்துவான் சரவணப்பெருமாள் ஐயர் ஒருரை செய்தனரெனத் தெரிகிறது. அதுவே இவ்விடத்தில் வழங்கிவருவதாம். அவ்வுரையிலே சில பொருந்தாத பாகங்களை யெடுத்துக்காட்டி, நம் யாழ்ப்பாணத்து மகாவித்துவான் சரவணமுத்துப் புலவர் அவர்கள்

மறுத்திருக்கின்றனர். சைவசித்தாந்த தீபகராய், செந்தமிழ்ப் பரிபாலனராய் சிவபுண்ணியம் பேறு உடையவராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலராம் நம் பெருந்தகையார் ஒருரையியற்றியுள்ளார். அவ்வுரை, அன்னோர் போல வித்தியாசாலை தாபித்தல் முதலிய சிவபுண்ணியங்களைச் செய்து, சைவசித்தாந்த பரிபாலனஞ் செய்யா நிற்கும் யாழ்ப்பாணத்து மகாவித்துவான் ஸ்ரீமத். சி. சுவாமிநாத பண்டிதர் அவர்களால் வெளியிடப்படவிருக்கிறதென்று அறிகின்றேன்.

இங்ஙனம் இருத்தலால் இப்போது வழங்கப்பட்டு வருமுறையை வைத்துக்கொண்டு, ஆங்காங்குத் திருத்த வேண்டிய இடங்களிற்றிருத்தியும், விளக்கியும், புதுக்கியும், மேற்கோள்கள் பலப்பலதாகக்காட்டியும், இலக்கணக் குறிப்புக்கள் சைவசித்தாந்தவுட்கிடைகளிவை சேர்த்தும், நூலாசிரியர் வரலாறு, வடமொழி நைடதம், அதநூலாசிரியர் வரலாறு, அவரியற்றிய நூல்கள், அலங்காரங்கள் என்னும் இவற்றையும் எழுதிப் பதிப்பித்தேன்.

இஃதிரண்டாவது பதிக்கப்படுமேல் இன்னமும் பலப்பல இன்றியமையா விடயங்கள் சேர்த்துச் செவ்வனே பதிப்பிக்க, வேண்டுவார் வேண்டியாக்கியும் புதுச்சந்நிதிக் கந்தநாதசுவாமியாம் எந்தையார் தந் திருவருடந்து முற்று கவெனப் பண்முறைவந்தித்துப் பிரார்த்திக்கின்றேம்''

பிள்ளையவர்களின் நைடதம் பதிப்பு 850 பக்கங்களுக்கு அதிகமான பெரு நூலாயிருந்தபோதிலும் அஃது இரண்டு ரூபாவுக்கே விற்பனையாவதால் அது மிக விரைவில் ஆறு பதிப்புக்களுக்கு மேல் வெளிவருவதாயிற்று.

பிள்ளையவர்களின் உரைச் சிறப்பு மிக்க நயமுடையதாகும். அவர் மல்யுத்தத்தின் இலக்கணத்தையும் அதன் விரிவையும் அகலமாகக் கூறியவாறே, மகளிரணியுங் கலன்களின் வகைகளையும் அவற்றுக்குரிய விடங்களையும் விபரமாகக் கூறியுள்ளார். அங்ஙனமே அவர் மருத்துவ சாத்திரத்திற் கூறப்படும் கருப்பூர வகைகளையும் நன்கறிந்து வேண்

டிய இடத்திற் கூறிய அறிவுத்திறன் போற்றுவதற்குரியதா கும்.

பாடல்களைக் கூறும்போது பாடல்களாவன, ஆற்று வரி, கானல்வரி, சார்த்துவரி, கிளர்வரி, எடுத்துக்கோள் வரி, உள்வரி, புன்புறவரி, திணைநிலவரி, முரிவரி, நிலைவரி, காண்வரி, கண்கூடுவரி, தேர்ச்சிவரி முதலாயின என்றும், வரியாவது அவரவர் பிறந்த நிலத்தன்மையும் தொழிற் றன்மையுந் தோன்றப்பாடி நடித்தல் என்ப எனவுங் கூறுந் திறன் நோக்குக.

## அருட்பாவும் மருட்பாவும்

சைவத்திருநெறிப்பன்னிரு திருமுறைகளையே அருட் பாவெனச் சைவத் தமிழ்உலகம் போற்றிவருகின்றது. தேவாரம் அருளிப்பாடுக, திருவாசகம் அருளிப்பாடுக, திருவிசைப்பா அருளிப்பாடுக, திருப்பல்லாண்டு அருளிப் பாடுக, திருப்புராணம் அருளிப்பாடுக என்று திருக்கோயி லருச்சகர் கூற, ஓதுவார்கள் அவற்றைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடுவது சைவத்திருநெறிச் சம் பிரதாயமாகும். அத்திருமுறைகளிடையே தாயுமானசுவா மிகள், குமரகுருபரசுவாமிகள் பாடல்களைக் கூட அடியார் கள் பாடுவதில்லை.

இஃது இங்ஙனமாகமுன்னர் ஆறுமுகநாவலரவர்கள் காலத்தில் இராமலிங்கசுவாமிகள் எனப்படும் வள்ளலார வர்கள் பாடியபாடல்களையும் அருட்பா என அன்னாரின் மாணவர்கள் பாடவாரம்பித்தனர். இராமலிங்கசுவாமி கள் தம்மருமைச் சீடப்பிள்ளைகள் மேற்பாடிய பாடல்களும் திருமுறைகளோடு சேர்த்து அடைவுசெய்யப்படுவது தெய்வநிந்தனையாகும் என்பதே நாவலரவர்களின் கருத் தாகும். நாவலரவர்கள் அக்கருத்தினைக் கூறியமைக்காக நீதிமன்றம் வரையும் போனமை சரித்திரப் பிரசித்தம்.

அருட்பாப் பூசல் ஆறுமுகநாவலர் இறந்து இருபத் தைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் நடைபெறலாயிற்று. இம்முறை 1904-ம் ஆண்டிலே கதிரைவேற்பிள்ளையவர்கள்

இராமலிங்கசுவாமியின் பாடல்கள் மருட்பாவேயன்றி அருட்பா அல்ல என எழுதினர்கள். அதனைப் பொருத இராமலிங்கசுவாமிகளின் தலைமயனரின் மைந்தன் ஒருவர் சென்னை நீதிமன்றத்திற் கதிரைவேற்பிள்ளை மீது பழி வழக்குத் தொடர்ந்தார்.

மாயாவாதிகள் முதலாகப் பிள்ளையவர்களுக்குப் பகைவர் குழாங்கள் அதிகரித்தன. பிள்ளையவர்கள் தொலைந்தார்கள் எனவும் சிலர் வாய்புலம்பினர்கள். நீதிமன்ற விசாரணையின் போது தமது பரீட்சையையும் பொருட்படுத்தாது இளைஞனைய கலியாணசுந்தரனர் அவர்கள் ஆணித்தரமாகச் சாட்சி கூறினர்கள். வழக்குத் தள்ளுப்பட்டதும் எதிரிகள் பனிப்படலம் போல் நீங்கினர் என்பர்.

''மருட்பாமறுப்பு'' என்னுந் நூலினுற் பிள்ளையவர்கள்பெருமை சைவ உலகமெங்கும் பரவிற்று. போலியருட்பாப் பிரபந்த நிர்க்கந்தகிஞ்சுக கண்டனம் என அவர் பெயர் பெற்றர்.

## அகராதியால் அடைந்த புகழ்

சுத்தாத்துவித சைவ சித்தாந்தியாய பிள்ளையவர்கள் செய்த சைவப்பணி, தமிழ்ப்பணி என்பனவற்ருேடு, அன்னர் செய்த அகராதிப்பணி அவருக்குப் பெரும் புகழைக் கொடுப்பதாயிற்று. ஆராய்ச்சித்துறையும் அகராதி அனுபவமும் வாய்ந்த பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் கதிரைவேற்பிள்ளையவர்கள் தொகுத்த அகராதியைப் பற்றித் தாம் எழுதிய தமிழும் அகராதியும் என்னும் கட்டுரையிற் குறித்துள்ளவை ஈண்டுச் சிந்திக்கற் பாலன.

''இங்ஙனமாக, இருமொழி அகராதிகள் பலபடியாய்த் திருத்தமடைந்து பெருகின. ஆனல், ஒரு மொழியகராதி விருத்தியடையாது ஒரு நிலையிலேயே வெகுகாலம் நின்றுவிட்டது. யாழ்ப்பாண அகரரதி ஒன்றுதான் பயன்பட்டுவந்தது. அதனையும் பதிப்பாளர்களும் பிரசுரகர்த்தாக்களும் பாழாக்கி வந்தார்கள். அச்சுப் பிழைகள் கூடத்

திருத்தப்பெருமல் இன்னும் பதிப்புக்கள் வெளிவந்தவண்ணமாயிருந்தன. இதற்கு ஒரு விலக்காக நா. கதிரைவேற்பிள்ளை இயற்றி வெளியிட்ட அகராதியைச் சொல்லலாம்.''

பிள்ளையவர்கள் செய்த பெயரகராதி பல பதிப்புக்கள் வெளிவந்தன. காஞ்சி நாகலிங்கமுதலியாரவர்கள் அவ்வகராதியைப் பதிப்பித்தபோது, முனிசிப். யே. எம். நல்லசாமிப்பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய முகவுரையிற் கதிரைவேற்பிள்ளையின் பெருமை கூறப்பட்டுள்ளது.

''எனது நண்பன் மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் பதிப்பித்த அகராதியே இற்றைவரை வெளிவந்த அகராதிகளுள் தலைசிறந்தது. அவர் நிரம்பிய புலமையும் புத்திக் கூர்மையும் அபூர்வஞானமும் படைத்தவர். அவரைப் போன்ற விவேகிகளை இக்காலத்திற் காண்பதரிது. அவர் தமது வாழ்நாளிற் பெரும்பகுதியை இந்தியாவில் தமிழ்த் தொண்டு செய்து கழித்தவர். அவர் கல்வி கற்பிப்பதிலும், பிரசங்கஞ் செய்வதிலும் நூல்களை எழுதி அச்சிற் பதிப்பதிலும் இணையற்றவர். அவர் தமது இளமைப் பருவத்திலேயே இறந்து போனமை ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.''

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத் தாபகரும் பாலவனத்தம் ஜமீந்தாருமாகிய பாண்டித்துரை தேவரவர்கள் கதிரைவேற்பிள்ளையவர்களுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரத்தில் ஒன்று பின்வருமாறு.

இருந் தமிழ் மொழியின் பொருளினை
 யுலகோ ரெளிதினிற நெளிதர லின்றி
வருந்துத லொழிய வோரகராதி
 மாண்புற வமைத்தனன் வளங்கள்
பொருந்தியாழ்ப் பாண மாநகர்க் கதிர்வேற்
 புலவனங் கதனையச் சியற்றி
மருந்தென வளித்தான் சென்னைவாழ் நமச்சி
 வாயனு மாமதி யவனே.

## சதாவதானஞ் செய்த சதுரப்பாடு

அறிவாற்றல் நிரம்பிய புலவர்கள் அட்டாவதானம், சதாவதானம் முதலியன செய்து தங்கள் கலைத்திறனைக் காண்பிப்பது அக்காலத்து வழக்கமாயிருந்தது. நினைவாற்றல் அதிக முள்ளவராலேயே அவதானஞ் செய்ய முடியுமென்பர். அவர்கள் தங்கள் நினைவாற்றலினாலே ஒரே சமயத்திற் பல வேலைகளைச் செய்வது அவதானம் எனப்படும். எட்டு வேலைகளை ஒரே சமயத்திற் செய்யும் அட்டாவதானத்தைப் பற்றிப் புலவர் ஒருவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

மாருமல்வாய் வேலு மயிலுமென வேசொல்ல
வாசகங் கைகள் எழுத
வருகணைக் கொருபுறந் தீரமற் றொருபுறம்
வரைந்திடும் இலக்க மாற
வளைதிரை குட்சிறிது கல்லணி வகுக்கின்ற
வன்கணைக் கினிது பகர
மருவுசொக் கட்டாலும் விளையாட மறைவாக
வைத்துசது ரங்க மாடக்
கூறுக வெட்டெழுத் தாணியெழு தும்படிக்
குங்கவிதை பகர வதிலோர்
கூறெழுத் தாணிசது ரங்கமுது குப்புறம்
குதிரையடி வெண்பா வரக்
கூறுபுல வோர் சபையில்
அட்டாவதான மூல
கோர் புகழ வே நடத்த.....

தமிழ்நாட்டுச் சைவமடங்களாலும் குறுநில மன்னரவையினுலும் புரவலராலும் புலவராலும் பெரிதும் போற்றப்பெற்ற கதிரைவேற்பிள்ளை சதாவதானஞ் செய்யப் போகின்றாராம் என்னுஞ் செய்தி சென்னையிற் பரவியது. அக்காட்சியைக் காண்பதற்கு வித்துவான்கள், கவிராயர்கள், பண்டிதர்கள், பிரபுக்கள், மடத்துத் தம்பிரான் சுவாமிகள் என்றித் திறந்தாரெல்லாரும் சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் நிறைந்திருந்தார்கள்.

அத்தியாச்சிரம பாலசரசுவதி ஞானனந்தசுவாமிகள் தலைமைப் பீடத்தை அலங்கரிப்பப் பிள்ளையவர்கள் சைவப் பொலிவுடன் மேடைமீதமர்ந்தார்கள். மண்டபத்திலிருந்து வித்துவான்கள் சரமாரியாக வினவத் தொடங்கினர்கள். திருமயிலை வெள்ளியம்பல உபாத்தியாயரின் மைந்தன் சோமசுந்தரனர் ''கபாலிக்குளத்தில் பூச்சரமாய் விழச் சுட்டது'' என்னும் பெருமையைக் கவித்துறையாப்பில் கவிபாடுமாறு கேட்டார். காஞ்சிபுரம் முருகேசு முதலியாரவர்கள் ''முருகர்க்கும், வைரவர்க்கும், காஞ்சிக்கும் சிலேடையாக மூ என்றெடுத்து கு வென முடிக்குமாறு நேரிசை வெண்பாப் பாடுக'' என்றார். நெல்லையம்பதி இராசரத்தினம் என்பார் சபாமண்டபப் பெயரும் மாசி கார்த்திகையாயிற்றென்றும், பசுபுலியைத் தின்ற தென்றும் வர, சொற்பொருட் பின்வரு நிலையணி அமையவும் 'ச' எனத் தொடங்கி 'ஏ' என முடியும் ஆசிரியப் பாவொன்று பாடுக' என்றார்.

இவ்வாறு வித்துவான்கள் புலவர்கள் சதா வினவியவைகளுக்குத் தங்குதடையின்றிப் பாடியும் விடை கூறியும் அவயினரை மகிழ்வித்த பிள்ளையவர்களை எல்லோரும் வாயார மனமார வாழ்த்திச் சதாவதானம் என்னும் பட்டத்தை அன்போடளித்தார்கள்.

இதுகாறும் உரையெழுதுவதிலும், கட்டுரை எழுதுவதிலும், புராணப் பிரசங்கஞ் செய்வதிலும், சொற்பொழிவாற்றுவதிலும் தலைசிறந்து விளங்கிய பெரியார் 1907 ஆண்டிற் சதாவதானமுஞ் செய்து சதாவதானம் கதிரைவேற்பிள்ளை யெனப் பெயர்பெற்றார்.

பிள்ளையவர்கள் பெருமையைத் தமிழ்நாட்டுச் சைவ சித்தாந்திகள் இன்றும் மறக்கவில்லை. திருப்பெருந்திரு. சித்தாந்தசாகரம் சிவஸ்ரீ காசிவாசி ஈசானசிவாசாரியார் ஈழத்துக்கு எழுந்தருளிய காலத்திற் பிள்ளையவர்கள்

பெருமையைக் கண்ணீர் வாரப் பேசியுள்ளார். அண்மையில் ஈழத்துக்கு வருகைபுரிந்த பாலகவி தற்புருடதேசிகர் பிள்ளையவர்கள் சமயவாதஞ் செய்த செம்மையை அழகாகக் கூறினார்கள். பிள்ளையவர்கள், சுத்தாத்துவித சைவசித்தாந்த உண்மையைச் சுருங்கிய சொல்லில் விளங்க வைத்துத் தாபித்து, மாயாவாதிகளை வாயடைக்கஞ் செய்த மாண்பை மனதாரப் போற்றி விளங்கினார்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வேலும் மயிலும் துணை

அத்துவித சித்தாந்த மகோத்தாரணரும் மாயா வாத தும்ஸ கோளரியும், சைவசித்தாந்த மகா சரபமு மாகிய யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி

சதாவதானம்

# நா. கதிரைவேற்பிள்ளை

அவர்கள்

# சரித்திரம்

ஷை பிள்ளை யவர்களின் மாணவரும், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தசன சபையின் நிருவாக சபை யாரு ளொருவருமாய

## திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

எழுதியது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை
வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார்
வெளியிட்டனர்.

சென்னை :

புரோகிரஸ்ஸிவ் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1908

சிவமயம்

# நூன் முகம்

"அசிந்தியமவ்வியக்த மநந்தரூபம் சிவம்ப்ரசாந்த மமிர்தம் பரஹ்மயோ நிம! ததாதி மத்தியாந்த விகீநமே கம் விபும்சிதாநந்தம ரூபமத்புதம்! உமாஸகாயம் பர மேஸ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம்." என்றற் றொடக்கத்தனவாக யசுர் வேதாந்தத்திற் பிரதி பாதிக்கப்பட்ட பரசிவனார் நீர்மையைத் தன்னகத்தே சிறிதுடைந்தாம் மேருகிரி முடிகளுள் ஒன்றுய இலங்காபுரிக்கோ ரெழின் முகமா யிலங்கும் யாழ்ப்பாணத்துதித்துச் செந்தமிழ் நாடெங்கணுஞ் சென்று புறச்சமயக் காரிருளைக் கடிந்த சித்தாந்த பானுக்களுட் சிறந்தார் கதிரைவேற் பிள்ளையெனும் காரளரே. அவர் 1871 ஆண்டிற் றோன்றி 1907 ஆண்டிற் கரந்தனர். அப்பெருந்தகைக்குக் கண்ணிமை போன்ற கெழுதகை நண்பராய் விளங்கினார். சென்னை சிந்ததிரிப்பேட்டை வேதாகமோக்த சைவசித்தாந்த சபையினர். அச்சபையார் பச்சிமபுலவகானப் பாவலராஞ் சைவசித்தாந்த மகாசரபத்தின் சரித்திரத்தைக் கத்திய ரூபமாகச்சுருக்கி வரைய அடியேற்குப் பணித்தனர். அப்பணியைமணியெனச் சிரமேற்றுங்கி யுஞற்ற என்னுள் தெழும்பேரவா யென்னைப் பிடர்பிடித் துந்தியது.

பிள்ளையவர்கள் வரலாற்றைச் சிறியேன் வரையத் தொடங்கியதை யுணர்ந்த அன்பர்கள் தங்கட்கு மயாவாத துப்மஸ்கோளரி மனமகிழ்ந்து விடுத்த கடிதங்களிலுள்ள கமலபந்தம், இலிங்கபந்தம், இரதபந்தம், நாகபந்தம், சதுரங்க பந்தம், மயூரபந்தம் முதலிய சித்திரக் கவிகளையும், சிலேடைக் கவிகளையும், பிறகவிகளையும், சரிதத்தினிடையிடையே யின்றி யமையாத விடங்களிற் புனைக்குமாறு அனைத்தையும் யெனக்கனுப்பினரேனும், அன்னோர் விழைந்த வண்ணம் யான் செய்யாது சரிதத்தையுஞ் சாலவுஞ் சுருக்கினேன். எற்றுக்கெனில் அங்ஙன மியற்றின் அத்

துவித சித்தாந்த மகோத்தாரணர் சரிதம் வாரிபோற் பெரிதும் விரிந்து பங்குனி மகத்திற்குள் வெளிவாரா தாக லால் அக்கவி ரத்தினங்களைப் புவியுள்ள கவிஞர்கள் போற் றிப் புகழ்ந்தணியப் பின்னர் பிரசுரிப்பல்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவாரயிருந்த பிள்ளையவர் கள் பிரிவாற்றுமைக்காகப் பிரபல வித்வசிரோன் மணி கள் பாடிய பாக்களுள் வேதாக மோக்த சைவ சித்தாந்த சபையார்க்குக் கிடைத்த கவிகளே இந்நூலிறுதியிற் சேர்க் கப்பட்டுள்ளன. மற்றைய கவிகளை ம-ா-ா-ஸ்ரீ புரசை பாலசுந்தர நாயக்கர் வெளியிடுகின்றுர் என்று கேட்டுப் பெரிதும் மகிழ்வெய்தினேன்.

அறிவினுங் கல்வியினுஞ் சிறியேனுய யான் யாத்த இச்சிறு நூலைச் சொன்னயமுடைய நன்னயப் புலவர்கள் அன்னம் போற் கொள்வார்களாக.

இங்ஙனம்,

திரு. வி. கலியாணசுந்தரன்

# இந்நூ லாக்யோ னியற்றிய கதிரைவேல் சரித்திர சாரம்

எண்சீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சொல்லுபய கதிர்காமத் தூநா கப்பர்
சுதன் கதிரை வேற்குரிசில் தொல்வே ளாளர்
கல்விமிகு நாவலர்மா ணுக்கர் மாட்டுக்
கலைகளெல்லாங் கற்றுணர்ந்து கற்பின் மிக்க
செல்விவடி வாம்பிகையை மணந்து சென்னை
சேர்ந்தேமா யாவாத திமிர மோட்டி
நல்லரிக்குக் கண்டிகைநீ றென்றே நாட்டி,
நவையிறுரைத் தமிழ்ச்சங்க நாத ராகி (க)

புத்தமத விருணீக்கிப் புலவ நாதன்
பொற்சபைகண் டவ்வவைக்குத் தலைமை பூண்டு
பத்திமுறை யேயருட்பா வென்றே நீதி
பதிவியக்க விதிகாட்டி யப்பா விற்குச்
சத்தியமா யுற்சவங்க ளியற்றி யீங்குத்
தரணிபுக ழவதானஞ் சதமு மாற்றி
சித்தியளி நீலகிரிக் குன்றூர்க் கேகிச்
சிவனடிக்கீழ்ச் சேருமொரு சீர்பெற் றுரே. (உ)

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
கதிரைநாயகன் துணை

சதாவதானம்

# ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளையவர்கள்

# சரித்திரம்

## காப்பு

தேன்மாமணி திகழும்மலர்த் திருவாரெழின் மருமன்
மான்மாமணி மருகன்சபை மருவுஞ்சிவ கதிரை
வேன்மாமணி சரிதஞ்சொல விரிநீருல கத்தே
வான்மாமணி மழமாவருண் மலர்த்தாள்பணிந் திடுவாம்.

## கடவுள் வாழ்த்து

### சிவபெருமான்

*ஆனேறும் பெருமானு ரரியேறுங் கரியவனு*
*ரளிக ளேறுந்*
*தேனேறுந் திருமலரிற் றிசையேறுஞ் சதுமுகனூர்*
*செயல்க ளேற*
*மானேறுங் கரமசைய மதியேறுஞ் சடையசைய*
*மன்றி லேறும்*
*வானேறுங் கடவுளர்தம் வாழ்த்தேறுஞ் சிவனடியை*
*வணங்கு வாமால்.*

எத்தேவர் செய்தொழிற்கு முதற்பொருளா யிலங்குமற்
விறைவ ஞர்க்கும்
வித்தாகி யிருபொருளை விழைந்தளித்தப் பொருளாக
விளங்குந் தேவி.
சித்தாய பெருமாட்டி சிவகுகனையுவந்தளித்த
செல்வி யென்றுஞ்
சித்தாந்த வொருமுதல்வி சிவகாம சுந்தரிதான்
சிந்தை செய்வாம்.

## விநாயகர்

நாரணனு ருருமாற்றி நல்லரவர் யோகிருந்து
நண்ண வன்றேன்
பூரணப்பே ருருவளித்துப் புகழருளும் புண்ணியத்தைப்
புனித மிக்க
வாரணக்கே தனன்வேண்ட வனத்தன்று நமையின்ற
வள்ளித் தாய்முன்
வாரணமாய் வந்ததனி யத்துவித வரும்பொருளை
வணங்கி வாழ்வாம்.

## சுப்பிரமணியர்

ஒருமயிலை வலத்தானை யொருமயிலை யிடத்தானை
யுருக்கை வேண்டுந்
திருமயிலை யளித்தானைச் சீர்மயிலைப் பதியானைச்
சிந்தை செய்வோன்
றருமயிலைத் தந்தானைத் தமிழ்மயிலை வளர்த்தானைத்
தளிர்த்த தோகை
கருமயிலை யூர்வானைக் கரமயிலைத் தரித்தனைக்
கருத்துள் வைப்பாம்.

## சமயாசாரிய சுவாமிகள்

சீர்பூத்த காழிநகர்ச் சிவஞான சம்பந்தர்
திருத்தாள் போற்றி
கார்பூத்த கடன்மிதந்த கவிநாவுக் கரசரது
கழல்கள் போற்றி.

பேர்பூத்த திருத்தொண்டத் தொகைவிரித்த
பெரியவர்தம் பூந்தாள் போற்றி
யேர்பூத்த மாணிக்க வாசகனா ரிணையடிக
ளென்றும் போற்றி.

## சந்தானாசாரிய சுவாமிகள்

சிவஞான போதஞ்செய் திருவெண்ணெய் மெய்கண்ட
தேத்தாள் போற்றி
சிவஞான சித்தியளி சிந்தாந்தி யருணந்தி
சிவன்தாள் போற்றி
சிவஞான மறைஞான திருவாளன் செய்ய விணைத்
திருத்தாள் போற்றி
சிவஞானப் பிரகாசஞ் செழித்தவுமா பதிக்குரவன்
செந்தாள் போற்றி.

## வித்தியா குரவர்

செந்தமிழ் மணியே போற்றி சிவம்வள ரரசே போற்றி
யிந்தமா நிலத்தி லுள்ளோர்க் கெழிலருட் பாவி
னுண்மை
தந்திட வுற்ற வெந்தை சதுரவா சகனே போற்றி
கந்தவேள் சபைக்கு நாத கதிரைவேற் குரவ போற்றி.

# நூல்

## கதிரைவேலர் காசியிற் கண்டது

அகண்டாகார நித்த வியாபக அழற்சோதிப் பிழம்
பாகிய அமலனுடன் அப்பிற்றண்மையென அபேதமாயி
லங்கும் அம்பிகையின் அருளமுதுண்டோன் அருட்பாக்களை
யணிந் தொளிருந் திருக்கோணவரையுந் திருக்கேதீசமுந்
திகழப் பெற்றதாய், சிங்காரவேலர் துங்கநற் கோயில்க
ளெங்கணு மோங்கும் எழிலினையுடைத்தாய், அமிழ்தினு
மினிய தமிழணங்கினுக்கோர் அரும்பீடமாய், முத்தமிழ்க்
கடலை முழுவதூஉ முண்ட உத்தமப் புலவர்கட்கு உற்பத்
தித் தலமாய், சலநில வளங்களைச் சாலவும் வகித்ததாய்
மிளிரும் இமிழ்திரைப் பரவை சூழீழநாட்டிலே, மேதாவி
யர் வாழ் மேலைப்புலோலியிலே, தொன்று தொட்டு நிலவுந்
தூவேளாள மரபிற்றோன்றிப் புதுச்சந்நிதிப் புனித வேள்
பூங்கோயிற் றர்மகர்த்தத்துவம் பூண்டு, அப்பெருமாற்கு
அல்லும் பகலும் அடிமைத் தொண்டியற்றும் அன்பையே
இன்பெனக் கொண்டொழுகும் நாகப்பிள்ளை யென்பார்
நல்லறமாம் இல்லறத்தை நண்ணி நடாத்துநாள் தமக்கோ
ராண்மகவின்றித் தலமணியாங் கதிர்காமக் கதிரைவேற்
கடவுள் சந்நிதியண்மிக் கருணைமிகுந்த அருணகிரியார் அருட்
டிருப்புகழை யோதிக் ‘கனிந்துருகும் அடியவர்கட்குக்கருணை
சுரக்குங் காங்கேய! எமக்கோராண்மக வருளல் வேண்டும்’
என்றிரந்து, இல்லந் திரும்பித் தாரணியோர் அனுட்டிக்
கற் பாலனவாம் விரதங்களுட்டலைமை யுடைத்தாஞ் சட்டி
விரதத்தை யனுட்டித்து வந்தனர். இம்மை மறுமைப்
பயன்களை யெளிதிலீயவல்ல இவ்வரிய நோன்பை யவரு
ஞற்ற, அஃதிற்குரிய அறுமுகனருளால் அவர்தம் அருமைக்
கற்பரசியார்க்குக் கருப்பமெய்திப் பிரசோற்பற்றி

யாண்டு, மார்கழி மதி, குருவாரம் 3உ க்குச் சமமான 1871 ஆம் டிசம்பர் மீ அருட்பூடண வுண்மை யவனியி லோங்கவும், அகம்பிரமவாத அலகைகள் அழியவும், குண்டர்கள் கொட்டங் குறையவும், வேளாளர் மேன்மை விளங்கவும், உண்மையருட்பா இஃதென வுலகுணர்ந்துய்ய வும் ஓர் மாண்புடைய ஆண் குழவி பிறந்தது. அக்குழவி கதிரைவேற் கடவுளின் அருளாற் காசினி கண்டமையால் அதற்குக் 'கதிரைவேல்' என்னுங் கனிமொழிப் பெயர் சூட்டினர் கண்ணுதலடியார். அருமருந்தன்ன அதனை, யன்னையும் பிதாவும் பன்னிரு கரத்தனைப் போற்றி வளர்ப்பாராயினர்.

## பள்ளியிலமர்ந்து பண்டிதராயது

பிறையென வளரும் பிள்ளைப்பெருமான் பள்ளியிலமரும் பருவம் பெற்றதை நாகப்பர் கண்டு நனியுவப்பெய்தித் தந்தவப் பேற்றைச் சைவ வித்தியாசாலையில் அமர்த்தினர். அவண் எங்குருநாதர் அந்தமிழ் இலக்கிய விலக்கணங்களை யங்கை நெல்லிக் கனியென வுணர்ந்தனர்; பின்னர், பிறைமதி சூடிய விறைவற் புரையுங் கறையிலாசிரியர் பால் கன் மந்து மிக்குந் தீக்கைகள் பெற்று, நல்லூர் தோன்றிய நவாலர் சீடருட் சிறந்த யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான், தியாகராசபிள்ளையவர்கள் முதலியோர் மாட்டுத் தொல்காப்பியமாதி இலக்கணங்களையும், சங்க நூல்களையும், தருக்க சாத்திரங்களையும், சித்தாந்த சாத்திரங்களையும், வடமொழிக் கிரந்தங்களையும் செவ்வனே கற்றுணர்ந்து, நல்லூர் சதாசிவப்பிள்ளையவர்களாண் சந்தேகம் பல தெளியப் பெற்றனர்; பதினெட்டாண்டுள் பாவலரும் நாவலரும் பரவும் பண்டித சிரோன் மணியாய் எண்டிக்கு மேத்த விளங்கினர்.

## இல்லறமாம் நல்லற மேற்றது

கற்றோர் மதிக்குங் காளையாங் கதிரைவேற் பெருமான் 'இல்லறமே வாழ்வினுக்கு முயர்கதிக்கும் வித்துமாந் துறவறத்தின் வேருமாம்' என்னு மாரண மொழியின் உள்ளக் கிடக்கையைக் கள்ளமறக் கற்ற கவிஞர் பெருமானுகலான் தம்பதி வந்த கோவிந்தபிள்ளையெனுங் குணமிக் கோன் கோதிலாத் தவத்துதித்து, அறிவில் அயன்றேவியையும், கற்பில் வடமீனையும், கவினில் கமலாட்சியையும், கருணையில் காமாட்சியையும் ஒத்திருந்த வடிவாம்பிகை

யென்னுங் கடிமலர்க் கோதையைக் களிந்தளித்தோர் களிப்பக் கலியாணஞ் செய்து கோதிலா இல்லறத்தை நீதி யுடனாற்றி வந்தனர். அவர்க்கு மங்கையர்க்கரசியே யிற் றையோருக் கொளீஇ வந்தாலொப்ப ஓர் பெண்மகவு செனித்தது. அத்திருக்குழவிக்குச் சிவஞானம்பிகை யென் னுஞ் சீரிய பெயரளித்தனர் கூரிய மதியினர்.

## சென்னை சேர்ந்து செந்தமிழ் வளர்த்தது

செச்சையப்பனிரு தாளை யுச்சியிலணிந்து, பச்சிமபுலவ கான நகரத்தில் பைந்தொடியோடினிதுறைந்த எம் பெரு வாழ்வை, அநாரிய பாடையில் விழுந்து மதிமயங்கி யிருந்த எங்கள் புண்ணியப் பயன்கள் சென்னையம் பதிக்கு வலிந் தன. சேயவிளம் பரிதியெனச் சென்னை சேர்ந்த செவ் வேளடியார் செந்நாச் செவிலிகள் செப்பும். ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரிடம் கெழுதகை நட்புக் கொண்டு, அவர் பால் அவஞான மழிக்குஞ் சிவஞானபாடி யம்பெற்று, அத்திருப்பாடியத்தின் உண்மைகளை யுள்ளங்கை நெல்லிக்கனிபோலுணர்ந்தனர். அதுகாலை அத்துவித சித் தாந்த போதகாசியராய்ப் பிறங்கிய 'வைதிக சைவ சித் தாந்த சண்ட மாருதம்' ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயக்கரவர் கள் பாலும்அன்பு பாராட்டி வந்தனர். மாதொரு பாகனும் வேதநாயகன் பாதபத்மங்களைச்சித்தந் திருத்திப் பத்தி மலர் தூவிப் பரவும் சிவவேடந்தரித்த தவவேடத்தார் வேண்டு கோட்படிச் சிவக்ஷேத்திராலய மகோற்சவ விளக் கம், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் சரிதவசனச் சுருக்கம், ஏகாதசிப் புராணத்திற்கு அரும்பதவுரை முதலி யன முதியோர் புகழுங் கதிரைவேற்பிள்ளை யவர்களாலி யற்றப்பட்டன.

இவையிற்றைக் கண்ட கற்றவரும், நற்றவரும், மற்ற வரும் வெற்றிவேற் போற்றுங் குற்றமிலா எங்குரவரை யடைந்து 'குறு முனியே இக் குவலயத் துற்ற லென விளங் குங் குணக்குன்றே! தமிழ்க்கடலை யுண்ட தவப்பேறே!! செந்தமி ழணங்கினுக்குச் சிறந்த சுதர்கள் பலருளரேனும்,

அவர்கள் அன்னேயாங் கன்னிக்கேற்றன ஆற்றிஞரில்லே. அப்பிராட்டியி னகமுவப்ப அரும்பே ரகராதி யொன் ருக்கல் வேண்டும்' என்று விழைந்து பன்முறை கேட்ப, அவர் தம் விழைவைத் தழைப்பா னுன்னித் தாளாண்மை மிக்க வேளாளர் தமிழ்ப்பேரகராதி யொன்று தமிழ் நாட்டிற் குபகரித்துத் தமிழ்த்தாய்க்குத் தலேமகனுயிலங்கினர். அவ் வகராதியின் அருமையைப் 'பூவிலிடை கடையாதி எழுத்தின் முன்பே ருறப்பதித்த புத்தகங்கள், யாவுமிடை கடையென்வே யாழ்ப்பாணப் புலோலிருகரின்மா சீர்த்தி, பாவு புதுச் சந்நிதியான்ருட்கதிரை வேற்புலவன் பதித்த மேன்மை, மேவுமகராதியிலே முதலதெனற் கிதன் பெயரே விளக்கு மன்றே'' என்று தஞ்சை சதாவதானம் பிரமஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் புகழ்ந்தமை காண்க. பிறரும் ஐயர் மொழியை மணியென வணிந்தனர். அதிவீரராம பாண்டியரருளிய கூர்மபுராணத்திற்கு உரையுங்கண்டனர், கண்டிகை யணிந்த கதிரை வேலர். பின்னர் பிள்ளேயவர்கள் முற்றத் துறந்த முனிவர் பெருமாளும் பட்டினத்தடிகளார் புராணத்தை முன்னெருவர் முதனூற் சிந்தியாது மொழிந்தமையால், அப்புராணத்துள் முதனூற்கு முரணுகக் கூறும் பாக்கள் நீக்கி முதனூற்றழுவிப் பல பாக்கள் பாடிச் சேர்த்துப் பதிப்பித்தனர். அதிலெம் பெருந்தகை யியற்றிய செய்யுளடை கச்சியப்ப முனிவர் செய்யுணடையைக் கடுக்கும்.

## மாயாவாத மருளே மாய்த்தது

இங்ஙனம் வண்டமிழ்க் கன்னியின் தண்டமிழ்ச் சுதர்களுள் தலேமைவகித்து, முன்னறத்தை முரணுதியற்றும் வேளேயிற் சூளே நாயகர் வேளே வணங்கும் வேலே விளித்து ''கந்தனேக் கருதுங் கதிரைவேலே! எமது யாக்கை வீக்குற்ற விக்கால் நாரண னறியாக் காரணனருளிய ஆரணத்திற்றைப் பூரணமாயுணரா நாம் பிரமமென்னும் வேம்பொத்த சோம்பர்கள் சைவ நிந்தனே புரியா நிற்கின்றனர். அம்மட்டிகளின் கொட்டங் குறைப்பதுங் கடனும்'' என்ன, அவ்வமுதவாக்கைச் செவிமடுத்த எஞ்சிரியர் ''மறைகணிந்தனே சைவநிந்தனே பொருமனமும்'' என

னும் நந்தி யெம் பெருமாள் பந்தமறுக்கும் வார்த்தை களைச் சிந்தித்துச் சிந்தாரிப்பேட்டையிற் சிவன்யாம் என் னுந்தீக்கரிகள் குழுவில் அரியெனப்புக்குப் பொறித்த வினுக் கட்கு அன்னோர் விடையளிக்காது அவைகலைத்தனர். மற் றொரு நாள் காசி வாசி-மகாவித்துவான் சித்தாந்த பீடம் ஸ்ரீலஸ்ரீ செந்திநாதசுவாமிகள் அக்கிராசனத்தின் கீழ் மிக்கதோர்சபை தக்கவர்களாற் சேர்க்கப்பட்டது. அப் பேரவையில் அத்துவிதஞ் செழிக்கவந்த அறிஞர் தருக்க நெறி பிறழாது சுருக்கமாகக் கடாவிய வினுக்கட்குச் செவ் வனிறை யிருக்காது விழித்தனர் வேதாந்திகள். அதைக் கண்ட அக்கிராசனர் முக்கணனும முழக்கி மக்களுய்ய வந்த மாதவப் பெருந்தகைக்கு "மாயாவாத தும்ச கோளரி" யென்னும் மாண்பட்ட மளித்தனர். இலக்கிய இலக்கணத் தருக்க நூல்களில் வல்ல புலவர்களும் புலோலிப் பிறந்த புண்ணியனைப் புகழ்ந்தனர். அவ்வெற்றியைக் கேட்ட செற் றமிலா நாயகர்க்குற்ற கழிபேருவகையை யீண்டு விரிக்கிற் பெருகும்.

## ஆரணி சமத்தான வித்துவானுயது.

நாம்பிரமமென்னும் நாகங்கட் கிடியென இலங்கிய பிள்ளையவர்களின் வெற்றியைக் கேட்ட பெற்றிமிகு ஆரணியரசர் மெதாசிரியப் பெருந்தகையை யழைத்துச் 'சைவமணியே! நஞ்சமத்தானத்துக்குத் தாங்கள் வித்து வானுய் விளங்கல் வேண்டு'மெனக் களங்கமிலா வுளங் கொண்டுரைத்தனர். அங்கனே யவரக மகிழ "நுஞ்சமத் தானத்துக்கு வித்துவானுய் விளங்குவல்" என் வித்தகர் விடை விளம்பப் புளகம் போர்த்தனன் தீர்த்தனைப் போற்று மேந்தல். அன்று தொட்டு அச்சமத்தான மடைந்து அரசன் சிறுர்கட்கும், பிறர்க்கும் அந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை அறிவுறுத்தி வந்தனர். அஃதங் ஙனமாக அவண் போந்து நிதம் அத்துவிதமெனப் பத்தி யழிக்கு மாயாவாதத்தை ஓயாமற் போதித்து வந்த ஓர் சாத்திரியாரிடம் பாத்திரஞ் சிவமெனப்பணியும் மாயா வாத தும்ச கோளரியை வாதிப்பான், மன்னவன் விடுப்ப,

அத்திருப்பணிக்கெனஅவனி தோன்றிய எமதையர் சாத்திரியார் நாத்திகக் கொள்கையை மாத்திரைக்குளோட்டி, அன்னவர்க்கு அத்துவித இலக்கணத்தை அறிவுறுத்தினர். அஃதை நேரிற்கண்ட அரசரால் எங்குரு நாதர்க்கு ''அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்'' என்னும் அரிய பட்டம் அணியப் பட்டது.

## பூதி மாட்சி புகன்ற மேன்மை.

மாயவாத தும்ச கோளரி, ஆரணி நகர சமஸ்தான வித்துவான், அத்துவித சித்தாந்த மகோத்தாரணர் என்னும் பட்டங்களைப் பெற்றுப் பலபல விடங்களிலுற்றுப் பிரசங்க மாரி பொழிந்து சைவவான் பயிரோம்பச் செய்து வருங்கால் அவரியற்றிய சைவபூடணசந்திரிகையில், அரிமேற்றுயிலுங் கரியவன்றரித்தல் கண்டிகை நீறென்பது ஆழ்வாராதிகள் உள்ளக் கிடக்கையென்றும், அதற்குக் கரியாக ''கரியமேனிமிசை வெளியநீறு சிறிதே யிடும் -பெரிய கோலத் தடங்கண்ணன் விண்ணோர் பெருமான் தன்னை-யுரிய சொல் லாலிசை மாலைகளேத்தி யுள்ளப் பெற்றேற்-கரிய துண்டோ வெனக்கின்று தொட்டு மினியென்றுமே'' என்னும் பிரபந்தைச் செய்யுளை மேற்கோளாகக் காட்டி மண்குறியிடையில் உண்டாய தென்றும் வரைந்தது முற்றிலுங் குற்றமென்று அழகிய மணவாள இராமாநுஜ ஏகாங்கியாரைத் தலைவராகக் கொண்டு வாதிக்க வெழுந்தனர் வைணவர்கள். பிள்ளைப் பெருமான் ஏகாங்கியார்க்குப் பின்னிடாது பிரமன்றலைதை பூதியணிந்த புண்ணிய மூர்த்தியெனப் பிரபந்தத்தினின்றும், வண்ணவுரைகள் எண்ணில காட்டிப் பிரசங்கவாயிலானும், பத்திரிகை வாயிலானும் நிறுவினர்.

இவ்விவாதம் மூன்றுமதி காலம் நீண்டது. இறுதியில் சென்னை வேணு கோபாலசுவாமி அரங்க மண்டபதில், அத்தியாச்சிரம பால சரஸ்வதி ஸ்ரீல ஸ்ரீ ஞானனதசுவாமிகள் அக்கிராசனத்தின் கீழ் ஈட்டிய மாபெருங் கூட்டத்தில், ஆயிரக்கணக்கான வித்துவ ஜனங்களின் முன் அத்துவித சித்தாந்தி வேதாகம புராணோதிகாசங்

களையும், திருவருட் பாக்களையும், திருவாய் மொழியை யுந் தழுவிக் கண்ணன் கண்ணுதலடியாரென்றும், அவர் அக்க மணியையும், அருநீற்றையும் அன்புடன் அணிந்து இன்புடனொழுகுகின்றர், என்றுங் கன்னல் விதானத்தில் கள் மாரி பொழிந்தாலென்ன உபந்நியாச மாரிபொழிந்து, உண்மை யடிவர்களை யுவகைக் கடலிற் ருேய்ந்தனர். பின்னர் பிள்ளையவர்கள் சைவபூடண சந்திரிகையில் விட்டுணு விபூதி ருத்திராக்க தாரண ரென்பதற்குப் பல பாசுரங்கள் நாலாயிரப் பிரபந்தத்திலே திரட்டிப் புனைந்து அதனை யிரண்டா முறை யச் சிறுத்திச் சென்னை செங்கான் கடைப் பந்தரில் மகாவித்துவான் புரசை ஸ்ரீமத் பால சுப் பிரமணிய முதலியார், எம். ஏ. அவர்களைச் சபாநாயகரா யமர்த்தி யரங்கேற்றினர். இஃதுடன் வைணவ விவாதம் முற்றுப் பெற்றது.

விண்டு மூர்த்தி விபூதி ருத்திராக்கதாரணரே யென்று நிறுவி வெற்றியுற்ற பின்னர் எமது பற்றிலார் பவநசிக்குஞ் சிவநிசிப்புராணத்திற்குச் சிறந்த விருத்தியுரை விளக்கினர். தடங்கருணைப் பெருங்கடாலாய யிறையுடனிரண்டறக் கலந்த அடியவர் திருச்சரிதங்களைக் கேட்போர் மனங்கனிந் துருகப் பிரசங்கித்து வருவாராயினர். அது காலை யவர்க் கோர் சேயுதித்துச் சேயடி சேர்ந்தது. அஃதுஞ் செவ் வேளருளாமெனச் சிந்தித்துச் சித்தாந்தஞ் செழிக்கச் சிறிதுந் தளர்ந்தாரில்லை.

## ஆவினன் குடி யாத்திரை செய்தது.

அரியும், அயனும், அக்கினியும், அவனியரசியும், ஆவும் ஆதித்தனும் அருந்தவஞ் செய்து அறுசமயக்கடவுளையருச்சித் துப் பெறுதற்கரிய பெரும் பேறடையப் பெற்றதும், மலர் தலையுலகில் மன்னும் மரகத மயூரன் மாத்தலங்களுட் டலை யாய்மருவுவதும், கலிமிக்க விக்காலத்தினுங் கண்டு தொழு வோர்க்கு வேண்டிய வரங்களையருள வல்லதுாஉமாய பழனித்தல புராணத்துக்குப் பதினைந்து தினத்தில் எம்பா வல சிகாமணி விருத்தியுரை வரைந்து பதிப்பிக்கச் செய்த னர். அஃதைப் பதிப்பித்த பி. நா. சிதம்பர முதலியார்

சிந்தித்த வண்ணம் பழநிப்பதியிலேயே வெளியிடக் கருதி சென்னையினின்றும் வெளிக்கிட்டனர் வேலர். அவர் ஆவினன் குடியை நாடி வருவதை யவணிருந்த அந்தணரும், அடியவர் குழாங்களும், அரசாங்க உத்தியோகத்தரும் அறிந்து, அறிஞரை எதிர் கொண்டழைப்ப, எங்குருநாதர் அன்னவர்களுடன் பன்னிருபுயாசலப் பரமனுர் பொன்னி றக் கோயிலைச் சென்றியுற வணங்கித் திருக்கோயிலுட் சென்று பெருமானையும் பெருமாட்டிகளையுந் தரிசித்து ஓர் நிலையத்திருந்தனர். மறுதினம் மாயாவாத தும்ச கோளரி யால் பழநித்தலப் புராணத்திலோர் சருக்கஞ் சித்தாந்த நயந்தோன்ற பிரசிங்கிக்கப்பட்டது. அப்பிரசங்காமுதைச் செவிமாந்த சிவனடியார்கள் சித்தாந்த மணிக்குப் பரிவட் டங் கட்டிச் சர்வ வாத்தியங்கள் முழக்கத்துடன் அவரைக் கிரிவலஞ் செய்வித்து, வாழ்ததி, யோகமூர்த்தியாலயத்துக் கழைத்துச் சென்று, ஆறுமுகத் தண்ணலார்க்கு அருச்சனை செய்வித்தார்கள். மாதவப் பெருந்தகையும் அகத்தொளி ருங் குகத்தேவைக் குனிந்து வணங்கிச் சந்நிதிவிட்டு முன்னி ருந்த மந்திரத்திற் றங்கி அடியவர் வேண்டுகோட்படி அவண் ஐந்துநாள் வதிந்து சென்னை நண்ணிச் செவ்வனே வாழ்ந்திருந்தார்.

## மதுரைத் தமிழ்ச் சங்க மாண் புலவ ராயதும் புத்த மதப் புன்மை விளக்கியதும்

பழநித்தலத்திற் பரிவட்டந் தரிக்கப் பெற்ற பண்டிதர் கோமான் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்ற மெறிந்த வென்றி வேலரும், தவத்திற் கதித்த அகத்தியனு ரும், கணக்காயர் மைந்தரும் கன்னித் தமிழ் வளர்த்த மது ரைத் தமிழ்ச் சங்கப் புலவமணியாய், எப். ஏ., பி. ஏ, வகுப்புகட்குச் சோதனைக் கர்த்தராய்த் துலங்குங்கால், தூவடியார் பலர் சேர்ந்து அவர்பால் அணைந்து, ''அன்புரு வாய ஐய! சின்னுட் பல்பிணிச் சிற்றறிவினராய சீவகோடிக ணிமித்தந் திருவருளையே திருமேனியாகக் கொண்டு திரு மறைகளை யருளிய சிவபெருமானிடந் தீக்கை பெற்றுச் சிவ ஞானபோத உண்மையறிந்து சிவமாய் விளங்குந் திருவாத

வூராதி தினகரர்களான் விலக்கப்பட்ட புத்த விருளிற் புண்ணியக் குறைவாற் சிலர் நண்ணிப் பித்தந் தலைக்கேறிப் பக்திநெறி நில்லாது, முத்தி சேர்ந்த, முதியோர்களையும், அவர்க்கன்பு பூண்டொழுகும் அடியவர்களையும் எள்ளி நகையாடுகின்றனர். அவர்கட்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி யாளவல்ல அறிஞர் தேவரீரேயன்றி வேறியாவர்'' என்று விண்ணப்பித்தனர். அவ்வார்த்தைகளைக் கேட்ட ஆரணி சமத்தான வித்துவான் அன்றிரவே ''புத்த மத கண்டனமென்னு மோர் புனித நூலியற்றி, ஆறுதினங்களுக்குள் அச்சு விமான மேற்றி, அனற் அத்தியை அங்கம் பூம்பாவை யாக்கிய அருளற்புதம் நிகழ்ந்த திரு மயிலாப்பூரிலே, பிரம மகோற்சவ காலத்திலே, பிச்சாடன மூர்த்தி யுற்சவத்திலன்று அரங்கேற்றஞ் செய்தனர். சென்னை இராயப்பேட்டை பௌத்த ஆச்சிரமத்தின் பாங்கர் பெரிய பாளையத்தம்மன் பெரிய மண்டபத்தில் அரியதோர் உபயந் நியாசமுஞ் செய்து புத்த மதத்திற் றத்துவ மின்மையை விளக்கினர்.

## வேளாளர் வருணம் விளங்க வுரைத்தது.

அடுத்த தினம் சென்னை விடுத்து இறைவன், இறைவி, இளையோன் இவர்களாற் புரக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குச் சென்றனர். அவண் காராளரை மன்னர் பின்னரென்றும், அங்ஙனே நிகண்டு கூறுகின்ற தென்றும், அதனைப் புரட்டி நான்காம் வருணத்தாரென்று அச்சிட்டனர் ஆறுமுகநாவலரென்றுங் கூறும் வருணசிந்தாமணி விடயமாகப் பலப்பல விவாத சபைகள் சேர்ந்தன. அவையிற்றில், காலமெல்லாங் காமனைக் காய்ந்து சோமசுந்தரனைச் சேர்ந்த சுத்தராம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை பெருமானை யிகழ்ந்தனர் உண்மை யுணரார். அவ்வசை வாசகங்களைக் கேட்ட அவர் மாணவரின் மாணவராய அருந்தவப் பெருந்தகையார் அங்கயற்கண்ணம்மை மன்றல் மண்டபத்தில், வடமொழியினும், தென்மொழியினும் பிறமொழிகளினும் வல்ல சங்கப் புலவர்கள் ஏங்க ''வேளாளர் நான்காம் வருணத்தவரே'' என்று சுமார் 6-மணி காலம் உபந்நியாசித்து, வைகறை யெழுந்து, வைகையில் மூழ்கி, அறுபான் நான்கு

அருளாடல்கள் புரிந்த அழகனையும் அங்கயற்கண் ணங்கையையும் அங்க முற வணங்கிச் சென்னை சேர்ந்தனர். சேர்ந்ததும் செயற்கரிய செய்து சித்தாந்த முத்தி சேர்ந்த சேக்கிழாராதி பெரியோர்கள் திருவருளால் திருவாய் மலர்ந்தருளிய அருணூல்கட்டு முரணுக வேளாளரை வைசியரென வகுக்கும் நூலினும், அதனைச் சிந்தியதும், கண்ணுற்றதும், பண்டிதர்கள் பாடிச் சூடிய சாத்துகவிகளினும் மலிந்து கிடந்த மாசுகளை மணிகடற் சுலவும் மாநில வரைப்பிலுள்ள மற்றவர்கள் கண்டு மனமகிழப் பத்திரிகையிற் பிரசுரித்தனர்.

## புராண முரைக்கும் புண்ணிய மேற்றது.

அவர் கல்வியாற்றலை யறிந்த ஸ்ரீமத் பாலசுப்பிரமணிய முதலியார் எம். ஏ., திருமயிலை மகாவித்துவான் சண்முகம்பிள்ளை முதலிய முதியோர் விழைந்த வண்ணம் வித்தகர் வடமொழிக் கடலையும், தென்மொழிக் கடலையும் நிலைகண் டுணர்ந்த சிவஞான சுவாமிகள் மாணவருட் சிறந்த ஸ்ரீமத்-கச்சியப்பமுனிவர் பச்சை மயூரனருளாற் பாடிய தணிகைப் புராணத்தை தனபதிகள் வாழுங் கனபதியாஞ் சென்னைக் கந்த சுவாமியாலய வசந்த மண்டபத்திற் பிரதி ஆதிவாரததினும், சிந்தாதிரிப்பேட்டை வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையடியவருள் ஸ்ரீமத்-வேதாசல முதலியார் விரும்பியபடி விளங்கி ழையாளருள் பெற்ற பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்தையும் கந்தனருளாற் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிய கந்தபுராணத்தையும், முறையே புதவாரத்தினும், சனிவாரத்தினும் பிரசங்கித்து வருவராயினர். அப்பிசங்காமுதை நறுஞ்சுவையை நுகர்ந் தோர், நூலாராய்ச்சியில் மிகுந்து நுண்ணறி வானரே.

## அருட்பா மேன்மை அவனியில் விளக்கியது.

இவ்வண்ணம் மாயனிடும் புத்த விருள் விலக்கிய சேயவிளம் பரிதியாம் மாயாவாத தும்ச கோளரியின் கீழ்ச் செந்தமிழுலகம் மிளிர் வதைக் கண்ட போலிப்புலவர்கள் பொரு

மற் பொருமையால் புதுச்சந்நிதியனேப் போற்றும் புலோலிப் புலவரேற்றின் புகழொளியைச் சிறுக்கப் பலச் சூழ்ச்சிகள் செய்தும், அவை பயனிலவாயின. பின்னர் பிள்ளையவர்களை, யாழ்ப்பாணச் சிங்கமென்றும், சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தியே நம்பந்தங் கழிக்க நாகப்பர் சுதரா யுற்றனரென்றும், சோமசுந்தர நாயக்கருக்குப் பின் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தைச் செழிப்போரில்லையென வாடிய எங்களுள்ளங் களிதுளும் பச் சோமனுர் சென்றுர் சூரியனுர் தோன்றினுர் என்றுலக முரைப்ப உதித்த கதிரை வேலென்றும், சைவசித்தாந்தக் கோட்டையைத் தகர்க்தவரும் புறச்சமய வீரர்களின் சிரங்களைக் கொய்யச் சைவபூடண சந்திரிகை யென்னும் வாளாயுதத்தை நமக்களித்த நாயகரென்றும் பலவாறு போற்றிய பண்டித ரத்தினங்கள் வினவயத்தான் நஞ்சநெஞ்சினர் களாகி "சென்னையிலுள்ளார் பலர் வடலூரை வள்ளலாகவும், அவர் பாக்களை அருட்பாவாகவுங் கொண்டுள்ளமையானும், அவரோடு நேரில் வாதித்து அவர் பாக்க ளருட்பா வாகாதென நிறுவினர் ஆறுமுக நாவல ராகலானும், அவர் மாணவரின் மாணவர் அத்துவித சித்தாந்த மகோத்தாரண ராகலானும், அவர் தொகுத்த அகராதியும் அருட்பா என்பது திருமுறையே யென அறைகின்றமையானும், விவாத சபைகள் சேர்த்து இராமலிங்க பிள்ளையையும், அவர் பாக்களையும் மருட்பிரகாச பொள்ள லென்றும், மருட்பா வென்றும் மன மகிழ்ந்துரைக்கும் யாழ்ப்பாணிகளைத் தாழ்த்திக் கூறின் எதிர் வேலில்லா துலவுங் கதிரை வேல் நம்மைக் கண்டிக்க வெழுவர். சென்னைச் செல்வர்கள் மாயாவாத தும்ச கோளரிக்கு மாற்றலாராய் விடுவர்கள்' என்னும் வஞ்ச யோசனைகளை நெஞ்சிற்ருங்கி முல்லா வீதியில் ஓர் சபை சேர்த்து எங்குரு நாதனையும், அவர் பரமாசாரியாரையுந் தூடித்து இராமலிங்கபிள்ளை பாட்டை அருட்பா வென்றும், ஐந்தாம் வேதமென்றும், அவரை ஐந்தாங் குரவரென்றும் உபந்நியாசித்தனர். அக்கரப் பிழையின்றி யறைய ஆற்றலில்லா மக்களை யோர் பொருட்படுத்திக் கதிரைவேற்பிள்ளையவர்கள் எதிர்த்தாரில்லை. பின்னர் அழுக்காறுடையார் செந்தமிழ்க் கல்வி நிரம்பப்பெற்றசித்தாங்க செல்வர்களைக்

கொண்டு திருமுறைகளைத் திருவருட்பா வென்போர் தீமை யிற் சிறந்தோர் என்று பிரசிங்கிக்கச் செய்யின் பித்த மத மெனப் புத்த மதத்தைப் பேசிய புலோலியார் தாமதிக் காது வாதத்திற்கு வருவர் என்றுத் தேசித்து, மகாவித்து வான் ஸ்ரீமத் ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள் பாலேகி ''சுந்தர! புறச்சமயக் களைகளை யறக்களைந்து சொல்லரி தாற் றணிகைப் புராணத்தை நல்லிசைப் புலவர் முன் ஞாயிற்றுக்கிழமை தோறும் நன்னயமாகப் பிரசங்கித்து வரும் கதிரை வேலையே வல்லவரென்று வந்திக்கின்றனர் பலர். அவரின்னுஞ் சின்னாளிவண் நிலைப்பரேல் நமது வித்து வப் பட்டங்கள் செத்து விடுமென்பது சத்தியம். திருமுறை களைத் திருவருட்பாவெனல் பெருமையல்ல வென்றும் வட லூரார் பாக்களையே அப்பெயராலழைக்கப்பட வேண்டு மென்றும் தாங்கள் உபந்நியாசிப்பின் கணக்கர் பாக்க ளைக் கறைப் பாக்களென்று கழறும் கதிரைவேலைத் துதிப் போரும் பிணக்குறுவர், சங்கப் புலவரும் தன்னுடு சேர் வர்.'' என்றியம்ப உரையாசிரியர் உற்று நோக்கிப் ''பற்ற றுக்கும் நீற்றை யணியும் நற்றவம் வாய்க்கப் பெற்ற இவர் களே இறையருள் கொழிக்கும் முறைகட்குக் குறை கூறத் தொடங்குவரேல், சிவநெறியாந் தவநெறியைச் சேரும் புண்ணியங் கைவரப் பெருக் கைதவர்கள் அருட் பாவை நிந்தியா தொழிவரோ! கலியின் வலிமையே வலிமை'' என்றுன்னி வந்தவர்கட்கு முகமன் மொழிந்தாற் போல ''அருட்பாவினருமையை அன்பர் களிக்க உபந்நியா சிக்குதும்'' என்றிசைத்து சித்தாதிரிப் பேட்டையில் பந்த மொழிக்கும் பன்னிரு முறைகளின் மேன்மைகளைப் பண்டி தர் வியக்கப் பிரசங்கித்தனர். புண்ணியமில்லாப் போலிப் புலவர்கள் தேவார திருமுறைகளின் பெருமையையே சுந்த ரர் பேசினரன்றி வடலூரார் பாக்களின் மாண்பை மனம கிழ்ந் துரைத்தாரில்லை என்று விசனித்து,

இலகா விருளலகை போலிகளே பேசு
முலகா யதன்பா லுருதே — பலகாலுந்
தாம்பிரமம் கண்டவர்போற் றம்மைக்கண்
டாங்கதுவே

நான்பிரம மென்பவர்பா னண்ணாதே — யூன்றனக்குக்
கொன்றிடுவ தெல்லாங் கொலையல்ல வென்றுகுறித்
தென்றுமற மேதெய்வம் மென்றென்று — வென்றிப்
பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன் சொன்
மிறையே விரும்பி விழாதே — சிறைமேவி
வாழ்பவர்போன் மண்ணுலகின் மன்னுமுரோ
மம்பறித்துத்
தாழ்வுநினை யாது துகிரனகற்றி — யாழ்விக்கு
மஞ்சு மடக்கு மது முத்தி யென்றுரைக்கும்
வஞ்சமணன் பாழி மருவாதே — செஞ்சொலா
லாதி மறை யோதி யதன்பயனென் றும்மறியா
வேதியர் சொன் மெய் யென்று மேவாதே —
யாதியின்மே
லுற்ற திரு நீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே — நற்றவஞ்சேர்
வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே — நீட
வழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே.'

என்று பெற்றான் சாம்பானுக்கும், முள்ளிச் செடிக்கும் முத்தியருளிய உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் அருமைத் திருவாக்கை யொருசிறிது மோராது மாயாவாதிகள், வைணவர்கள், புத்தர்கள், வேளாளரை வைசிய ரென்போர் ஆகிய இன்னவர்களுடன் கலந்து, பன்னிரு முறைகளையும், பரமாசாரிய சுவாமிகளையும், நாவவர் பெருமானையும் தூடித்தனர்.

சைவத்தின் மேற் சமயம் வேறில்லையென்றும், அச்சமயாசாரிய சுவாமிகளே ஜெகத்குருக்களென்றும், அவர்களருளிய பாக்களே திருவருட்பா வென்றும் பிரசங்க வாயிலானும், பத்திரிகை வாயிலானும், புத்தக வாயிலானும் கரதலா மலகம் போற் காட்டிய வைதிக சைவ சிந்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயக்கரவர்களாற் றாபிக்கப்பட்ட சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதாக

மோக்த சைவ சித்தாந்த சபையார் அருட்பா நிந்தை யைக் கேட்டுச் சகியாது புலவரேற்றை யடைந்து, ''நஞ் சபைத் தாபகருந் தலைவருமாய நாயகரவர்கள் நம்பனடி நணுகிய பின்னர் நாவலமணியாய தங்களையே தலைவரா கக் கொண்டுள்ளோம். சென்னைக் கணுள்ள சிலர் முன்னிரு வினையால் பன்னிரு முறைகளைப் பண்டைக் காலந் தொடங்கிப் பரனடியார்களான் வழங்கப்பட்டு வரூஉந் திருவருட்பா என்னும் பெயரா லழைப்பது பாவமெனப் பகர்ந்து பாவத்திற் காளாகின்றனர். கற்றோர் அல்லாத மற்றையோர் அவர்தம் பொய்யுரைகளை மெய்யெனக் கொளா வண்ணம் திருமுறைக்குத் திருவருட்பா என்னுந் திருப்பெயர் தொன்று தொட்டு ஆன்றோர்களால் வழங்கப் பட்டு வருகிறதைப் போதித்தல் வேண்டுமென வேண்டி னர். அடியார்க் கெளியவன் அடியைப் பேணும் மிடியிலார் சபையாரை நோக்கி ''யங்ஙனே செய்வல்'' என்னுமரிய விடை யளித்து அன்று தொட்டு அருட்பா என்பது திரு முறையே யென்றும், மருட்பா என்பது முக்குண வயத்தான் முறைமறந் தறையும் இக்காலப் புலவர் பாக்களே யென் றும் பசுமரத்தாணிபோற் பரதகண்டத்தினுட்ட விரதங் கொண்டனர். சிந்தாதிரிப்பேட்டையினும், பிறவிடங்களி னும் கூடிய விவாத சபைகடோறுஞ் சென்று சிற்றம்பலத் தாடும் பெற்ற மூர்த்தியே அருட்பிரகாச வள்ளலென்றும், காழியிற் றோன்றிக் கணக்கிலாச் சீவரைக் கரையேற்றிய கௌணியர் பெருமானுதி கருணை வள்ளல்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகளே திருவருட்பா வென்றும், இராமலிங்கபிள்ளை யருட்பிரகாச வள்ளலாகா ரென்றும், அவர் பாக்கள் அருட்பா ஆகாதென்றும், ஆரண ஆகம அருணூல்களையும், மற்றைய தெய்வீக சாத்திரங்களையும் காட்டிச் சாதித்தனர், அவ்வுபந்நியாச வமுதைச் செவிம டுத்த புண்ணிய ரின்புற்றார். பூரியர் துன்புற்றார். ஸ்ரீமத்- ஆலாலசுந்தரம்பிள்ளை யவர்களும் அருட்பா வென்பது திரு முறையே யென்று அகமலர்ச்சியுடனும், முகமலர்ச்சியுட னும் அன்பர்கட்குப் போதிக்கத் தொடங்கி ஆரணி நகர சமத்தான வித்துவானிடம் கெழுதகை நட்புப் பாராட்டி னார்.

ஆலாலசுந்தரம் பிள்ளையவர்களும் எமதாசிரியர் பக்கல் நண்ணியதை கண்ட ஆலமனைய வன்னெஞ்சர்கள் வடலூர்ப் பிள்ளையை வள்ளலென்றும், அவர் பாக்களை யருட்பா என்றும், நாட்டவேண்டுமென வெழுந்த நோக்கத்தை யறவே யொழித்துக் கதிரை வேற்பிள்ளை யவர்கட்கு இன்னல் விளைக்கத் தொடங்கினர். பன்னிரு புயாசலங்களையுடைய பகவனுரைச் சென்னியுற வணங்கிச் செந்தமிழ் மாலை சாத்தும் சீரியர்க்குப் பூரியர்கள் புரியும் புன்குறும்புச் செயல்கள் என்செயும்? அவைகள் பரிதிமுற்பட்ட பனியெனப் பறந்தன. திங்களணிந்த சங்கரனருளாற் றெய்வத் திருவாளர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகளே திருவருட்பாவென்றும் மற்றையோர் பாக்கள் மருட்பா வென்றும் பெருஞ் சங்கங்களிற் சென்று அருஞ் சங்கப் புலவர் செய்த உபந்நியாச சாரங்களைப் பின்வருவார்க்குபகரிப்பா னுன்னி வேதாகமோக்த சபையார்கள் அவையிற்றைத் திரட்டி அச்சு விமான மேற்றிப் புத்தகமாக்கி அதற்கு இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்னும் எழிலுமம் ஈந்து உலகன்னை சிகியாகிப் புன்னையின் கீழ்ச் சென்னியாறுடையானைச் சென்னியுறத் தாழ்ந்து சிந்தித்து வந்தித்து வழிபடப் பெற்ற மயிலையம் பதியிலே, கபாலீச் சரத்திற் கெதிரிலே சித்தாந்த மந்திரம் என்னும் கிருகத்திலே கதிரை வேற்பிள்ளை யவர்களைக் கொண்டு அரங்கேற்றிப் பிரசுரித்தனர்.

மருட்பா மறுப்பைக் கண்ட மக்களுள் மாதேவன் மலரடியை யென்றும் மனந்தாங்கி, மறையாகம வழி நிற்கும் மேதாவிகள் ஆனந்த வாரியிலாழ்ந்தனர். பூர்வபக்கிகள் ''கிணறு வெட்டப் போய்ப் பூதம் புறப்பட்டாற் போல'' யாழ்ப்பாணத்தானைத் தாழ்த்த வேண்டியாங் காதலிப்ப, இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாசங்கள் வெளியாயினவே. இவ்வண்ணம் நிகழுமெனக் கனவிலுங் கருதவில்லையே. நாம் ஒன்றுன்ன நாதன் ஒன்று நினைத்தனனே என்செய்வதென்று இரங்கியேங்கி யேறரும் ஆகுலக் கடலில் ஆழ்ந்தனர்.

"சும்மா கிடந்த சங்கை யூதிக் கொடுத்தாளுண்டி" என்றாற் போல வாளாவிருந்த வண்டமிழ்க் கதிரைவேலை வலிய வாதத்திற் கழைத்து, வடலூரார் மாண்பையும், அவர் பாக்களின் அபிவிருத்தியையும் அழித்தனரே பாவிகள் என்றும், சென்னைப் புலவர்கட்கும், பிறர்க்கும் புலோலிப் புலவன் புகழைக் கெடுக்கக் கருத்துண்டேல் இராமலிங்கர் பாடலை யெற்றிற்கோ இடையிலிழுக்க வேண்டுமென்றும், இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாசம் வெளிவந்ததற்குக் காரணர்கள் சென்னைப் புலவர்களே என்றும், கலியுகத்திலிவர்கள் கலியாண நாட்டுக் கதிரைவேலை வலிந்து வாதித்தமையாலன்றோ பன்னரிதாம் பன்னிருமுறைகளின் மேன்மை பாரெங்கும் பரவியது; யாவும் இறையருளே யாகும் என்றும், பலர் பலவிதமாகப் பகரா நின்றனர். சுமார் முப்பதிற்றைந்து வருடத்துக்கு முன்னர் வடலூரில் நடந்தேறிய விடயங்களை இக்காலத்தில் மெய்ப்பித்தல் மிக்க கடினமென்றும், வழக்கெடுப்பின் பிள்ளையை வள்ளலென்போர் மீளாநரகத்திற் காளாவாரென்று கரையுங் கதிரை வேலர் பயந்து கடன் மத்தியிலுள்ள தன்னூடே குவர்; அல்லது பிள்ளையை வள்ளலென்றும் அவர் பாக்களை அருட்பா என்றும் ஒத்துக் கொள்வார் என்று யோசித்து விளம்பினர் வேறு சிலர். மருட்பா மறுப்பில் 27 விடயங்கள் பொய்யாக வரையப்பட்டுள்ளன என்று 1904 ௵ ஜூன் ௴ சென்னைடவுன் பொலீஸ் கோட்டில் இராமலிங்கம்பிள்ளை தமையன் தனராய வடிவேற்பிள்ளை யவர்களால் வழக்குத் தொடுக்கப்பட்டது. காலண்டர் நம்பர் 24533 - 1904. சென்னை ஹைகோர்ட் வாசால நியாயதுரந்தர சிங்கங்களாகிய பிரம ஸ்ரீ வி. விசுவநாத சாத்திரியார் B. A. B. L., அவர்களும் பிரம ஸ்ரீ சாமராவ் B. A. B. L., அவர்களும் கலியிற்றிரு முறையினுண்மையை வலியுறுத்த வந்த பெருந்தகைக்காக வாதிப்பான் நீதிபதி முன் நின்று 27 விடயங்களுள் 20 விடயங்கள் இராமலிங்கர் பாக்களில் வெள்ளிடை மலை போல் விளங்குவதைக் காட்டினர். எஞ்சிய ஏழும் போலியருட்பா மறுப்பு, குதர்க்காரணிய நாச மகா பரசு கண்டனம், இராமலிங்கபிள்ளை படிற்றொழுக்கம், முக்குணவயத்தான் முறை மறந்தறைதல் தத்துவ

போதினி, தத்துவ விவேசினி, தத்துவ விசாரணி, தின வர்த்தமானி, சுகிர்தவசனி, ஞானபானு, நேட்டிவ்பப்ளிக் ஒபினியன், அற்புதப் பத்திரிகை, வர்த்தமான விமர்சனி, திராவிடப் பிரகாசிகை, பாவல சரித்திர தீபம் முதலிய புத்தகங்களையும், பத்திரிகைகளையும், விளம்பரங்களையுங் கொண்டு வடலூர் மேட்டுக் குப்பத்துக்குச் சென்று இராம லிங்கர் செய்கைகளை நேரிற்கண்ட சீரியர்களைக் கொண்டும் நிரூபிக்கப்பட்டன. அவ்வழக்கைச் சுமார் ஆறுமாத காலம் விசாரித்த நீதிபதி கனம் அஜீஜுடின்சாயபு பஹதூர் அவர் கள் 1904 ஹ நவம்பர் மீ 21 உ. ஆகிய கார்த்திகைச் சோமவார புண்ணிய தினத்தன்று தள்ளி விட்டனர். அந் நியாயாதிபதி யவர்களால் எங்குரு நாதருக்கு மாயாவாத தும்ஸ கோளரி என்ற பட்டம் உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வெற்றியைக் கேட்ட கற்றறிந்த நற்றவர்கள் வரம் பிலா இறும்பூ தெய்தினர். சிவனேகதி யவனேபதி யெனக் கொண்டு சைவம் வளர்த்த சிவஞான சம்பந்தராதி திரு வருட் செல்வர்கள் செம்மலர்த்தாளை நம்பிக ஸ்ரீமதானந்த முத்துக்குமாரசுவாமி பக்தசன சபையாரும், சைவ சித் தாந்த சங்கத்தாரும், சைவசமய பக்தஜன சபையாரும், ஒருங்கு சேர்ந்து, ஸ்ரீ முத்துக்குமார சுவாமியார் நற்றிருக் கோயிலியே 1904 ஹ நவம்பர் மீ 27 உ ஞாயிற்றுக் கிழமை எந்தைக் கந்தவேட்கும் பரமாசாரிய சுவாமிகட்கும் அபிடேக அலங்கார ஆராதனஞ் செய்து, அருட் பாக்களை யும் அன்புடன் பூசித்து, அழகிய விமானத்தில் எழுந்தருளு வித்து, திருவீதி வலஞ் செய்வித்து, அரசாங்கமேறி அருட் பாவினுண்மை விரித்த, அத்துவித சித்தாந்த மகோத்தார ணரைக் கொண்டு திருமுறைகளின் மான்மியத்தைப் பிர சங்கஞ் செய்வித்துப் பெறுதற்கரிய பெரும் பேற்றை யிம் மையிலே யடைந்தனர். அடுத்த ஆதிவாரம் எமது ஸ்ரீபால சுப்பிரமணிய பக்த ஜனசபையின் பிரதம வருடோற்சவத் தன்று, சுந்தரேசப் பெருமானார் திருவாலயத்தினின்றும் அடியேம் ஆசிரியரை யெதிர் கொண்டழைக்கக் கதிரைவேற் பெருந்தகையும் கடையேமை யொரு பொருட்படுத்தி, எங்களுடன் அளவளாவி சபை நிலைய மடைந்து, அக்கிரா சனம் வகித்து, வருடோற்சவத்தைப் பெருமையாய் நடத்

தினர். சபைக் காரியதரிசியும், எமது தமயனுரும் ஆகிய திரு. வி. உலகநாத முதலியாரவர்கள் இயற்றிய திருவருட்பா விஜயநாமாவளி சிவனடியார்க்கு விநியோகிக்கப் பட்டது. புரசைப் பரசிவ தமிழ் வேத பாராயண பக்த ஜன சபையாரும் 1904 ௵ டிசம்பர் ௴ 18 ௳ பானுவாரம் ஸ்ரீ கங்காதரேசுரர்க்கும், பங்கசாட்சி அம்மையாருக்கும், பரமாசாரிய சுவாமிகட்கும், மகாடபிடேக அலங்காரமாதி நடத்திப் புண்ணியத் திருவருட் பாக்களைப் புட்பச்சிவிகையில் எழுந்தருளுவித்துத் திருவீதி மகோற்சவம் நடத்தினர்.

இங்ஙனஞ் சென்னைச் சிவனடியார் திருக்குழாங்கள் பன்னிருமுறைகட்கும் பத்தியா யுற்சவஞ் செய்து பரமானந்தராய்ச் செய்த வந்தனுபசாரங்களையும், பரிசுகளையும் ஏற்ற எங்குருநாதர், அருட்காமக் கொடியின் அங்கயற் கண்கள் களிக்கப் பாதந்தூக்கிப் பாசத்தாற் கட்டுண்டுழலும் பசுக்களீடேறப் பரமன் பஞ்சகிருத்திய நடம்புரியுஞ் சிதம்பரத்திற்கு ஆரோத்திரா தரிசனத்திற்குச் சென்றனர். தில்லைவாழ் அந்தணர் பெருமான்களும், திருமடத்துத் தம்பிரான் சுவாமிகளும், தேவார பாடசாலை ஓதுவார் மூர்த்திகளும், திருவாதிரைத் தரிசத்துக்காக வந்திருந்த சிவனடியார்களும், சிவஞான தீபத்தைக் கண்டு, அகங் குளிர்ந்து முகமலர்ந்தனர். அவ்வாண்டு, ஆரோத்திரா தரிசனத்திற்கு, அடுத்த தினமாகிய (24. 12. 04) ஆதிவாரம் ஸ்ரீ சமயா சாரியசுவாமிகட்கு அபிடேக அலங்கார ஆராதனஞ் செய்து, அம்பலப் பாக்களாம் அருட் பாக்களை யன்புடன் பூசித்து, அரசுவாவாகிய அத்தியின் மீது எழுந்தருளப் பண்ணி குடை, கொடி, சமரவாதி சர்வோபசாரங்களுடன் புறப்பட்டு, இருமொழித் திருவருட்பாக் கோஷத் தோடு, மாடவீதி திருவுலா வந்து, திருமுறைகளைக் கஜத்தினின்றும், ஹரநாம கோஷமும் காதான கோஷமும் திசைகடோறுஞ் செவிடுபடச் சீராக விறக்கி, அரச சபையாம் ஆயிரக்கான் மண்டபத்தில் வீற்றிருக்கச் செய்தனர். அத்தியின் பின்னர் அஞ்செழுத் தோதி வந்த அத்துவித சித்தாந்த மகோத்தாரணரை அன்பர்களின்புறு மாறு அருட்பா வுண்மையை அம்மண்டபத்தி

லுபந்நியாசிக்க அந்தண சிகாமணிகளாஞ் ஞாபிக்க, அவரும் அன்னவர் ஆணையைச் சிரமேற் றூங்கி அருளுதன் மகாமண்டபத்திலே சுமார் 8,000, அன்பர்கள் மத்தியில் அருட்பா வுண்மையை யுபாந்நியாசித்தனர். திருமுறை யுற்றவஞ் செய்த பெருமறை யோர்களால் எம்பிராற்குப் பூமாலை சூட்டப் பட்டுப் பட்டுப் பரிவட்டமுஞ் சாத்தப் பட்டது.

அவ்வருமையைக் கண்ட பெருமையிற் சிறந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் தங்கள் தேவையம்பதிக்குச் சித்தாந்த மணியை யழைத்துச் சென்று, ஸ்ரீமீனாட்சி சுந்தரேசப்பெருமானார் ஆலயத்திலே, திருமுறைகட்குத் தில்லையம்பதியிலே செய்தவண்ணம் மகோற்சவம் செய்தார்கள். அன்றிரவு வென்றிவேற் போற்றும் பிள்ளையவர்களால் வள்ளலருண் மணக்கும் திரு முறை மேண்மை யுபந்நியாசிக் கப்பட்டது. இறுதியில் மாயாவாத தும்ச கோளரிக்கு மாலைசாத்திப் பரிவட்டந் தரித்து மாலையொழித்தனர் வணிகமாக்கள். அவையிற்றை அகமகிழ்ந்து குகனடி யுன்னி யோற்றுச் சென்னை யடைந்தனர் செந்நாப் புலவர்.

தொண்டை நாட்டுச் சிவதலங்களுட் சிறந்த திருக் காஞ்சிச் சிவநேசத் திருக் கூட்டத்தாரும் சிதம்பரத்தில் இரண்டாமுறை நடந்தேறிய திருவருட்பா வுற்சவம் போல், திருவேகம்பத்தினும், நடத்த வேண்டுமென விழைந்து, நங்குருபாலணைந்து, ''நம்பனருளால், நாகப்பர் தவத் துதித்த நாயகமே! இக்காலத்து மக்களும் இனிவரு வோரும் இன்புற்றுய்ய உண்மையருட் பாக்கள் திருமுறைகளே என்று, அரசமன்ற மேறி யறிவித்த ஆண்டகையே! செம்மறை யோர் அம்பலத்தில் அருட்பாவுற் சலஞ் செய்து, ஆனந்த மடைவதற்குக் காரணராயிருந்த கதிரை வேலரசே! அடியேம் அருட்பா வெற்றியைக் குறித்துத் திருக் காஞ்சியில் மகோற்சவம் நிகழ்த்த மகிழ்ந்துள்ளோம். மாதவப் பெருந்தகை யாண்டெழுந்தருள வேண்டுமென வேண்டினர். வேண்டும் அடியவர்கட்கு வேண்டிய வரங்களீயுந் தாண்டவனை வழிபடூஉந் தாளாண்மை மிக்க வேளா

ளமணியும் அவர் வேண்டுகோட்கிணங்கி அயனுதியோர் வாழும் அருங் காஞ்சியை யணேந்தனர். கதிரை வேற் பெரு மான் காதன் மேலீட்டால் காஞ்சிக்கு வருவதைக் கேட்ட கறைக் கண்டனடியார் கரையிலா இறும் பூதெய்தித் தெருக்கடோறும் பூப்பந்தர்களும் தோரணங்களும் நாட்டி வழிபார்த்திருந்தனர். அவ் வீதிகடோறும் அன்பர்கள் அக மகிழச் சென்று, அன்னவர்கள் பானுவைக் கண்ட பங் கயமென முகமலர்ந்து செய்த வந்தனுேபசாரங்களை யேற்று ஓர் அன்பர் நிலைய மடைந்தனர். அடுத்த நாள் (22-1-05) திருக்கூட்டத்தார் ஏகாம்பரப் பெருமானுர் ஆலயத்திலே சமயாசாரிய சுவாமிகட்கும், சேக்கிழார் பெருமானுக்கும் அபிடேக அலங்காரஞ் செய்து, அருட்பாக்களை யருச் சித்து, ஆலய அரசுவாமீது ஆரோகணிக்கச் செய்தனர், யானையும், குமரகோட்டத்துக் கஜமும், ஸ்ரீ வரதராஜப் பெருமான் வேழமும், வெண்சாமரம் வீச இராச வீதி நோக்கி நடந்தது. அந்தணர் வேத வொலியும், அருந்தவர் அருட்பா வொலியும், அதர் வேட்டுக்களின் முழக்கமும், வாத்திய கோஷமும் திசைகளைச் செவிடு படுத்தின. அவ் வுற்றலத் திருக்கோலத்திலே அன்பர்கள் மத்தியில் என் பணிந்த இறைவனே யென இலங்கினர் எங்குருநாதர். இராச வீதியிலே இருகாலும் திரு முறைகளை முறைப்படி பாராயணஞ் செய்யும் பலப்பல பத்தஜன சபையார்கள் தத்தஞ் சபைகட் கெதிராகத் தந்தி வந்த போது, செந் தமிழ் வேத பாராயணத்துடன் யானையை வலம் வந்து யாழ்ப்பாணப் பெருவாழ்விற்குப் பூமாலைகள் சாத்தி நண்ண ரிதாம் புண்ணியத்தைக் கண்ணிமைப் பொழுதில் கைவரப் பெற்றனர். இவ்வண்ணம் பெருங் கோஷ்டிகளுடன் வருங் கஜங்கள் ஆயிரக்கான் மண்டபத்தை யண்மின. அந்தணர்கள் அருட்பாவை அத்தியினின்றும் பக்தியுடனிறக்கிச் சபா மண் டபத்தில் வீற்றிருக்கச் செய்தனர். கதிரைவேற் பெருந்தகை யைக் கண்டறியாத எண்ணிறந்த புண்ணியர்கள் ஆங்கே நண்ணிக் கதிரை வேற் பிள்ளை யாவர் யாவர் என்று ஒரு வரை யொருவர் வினவிய ஒலியே யெங்கு மலியாநின்றது. அதுகாலை ஆரியம் வல்ல வீரியர் ஒருயர்ந்த பீடத்தின் மீதே றிச் சில நாம சங்கீர்தன முழக்க, அன்பர்களுங் கண்ணுரக்

கண்டு துன்பமொழிந்தனர். உடனே அருட்பா மான்மியம் ஆசிரியரால் உபந்நியாசிக்கப் பட்டது. உற்சவம் செய்து உற்சாக மெய்திய உண்மைச் சிவநேயர்களால் இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண விஜய மகா சரபம் முதலிய புத்தகங்கள் பத்தர்கட்கு விநியோகிக்கப்பட்டன. ஞாபக சின்னத்திற்காக நாகப்பர் சுதர்க்கு அரதநம் பதித்த கௌரி சங்கர கண்டி யளிக்கப்பட்டது. உறையூர் சைவ சித்தாந்த சபையாரும் யாழ்ப்பாணத்துபய கதிர் காம வாசகரைத் தம்மூர்க் கழைத்துச் சென்று உண்மை யருட் பாக்கட்கு மேற்குறித்த வண்ணம் உற்சவஞ் செய்து பிள்ளையவர்கட்குச் சன்மானஞ் செய்தனர். திருவருட்பா விளக்கம் என்னு மோர் பிரபந்தமும் இயற்றிப் புனிதர்க் குபகரிக்கப்பட்டது. திருவண்ணுமலை, சீர்காழி முதலிய தலங்கட்குச் சுவாமி தரிசனத்திற்காகப் பரிசனங்களுடன் ஸ்ரீபால சுப்பிரமணிய பக்த ஜனசபைத் தாபகர் சென்ற காலையில் ஆங்காங்கே அன்பர்கள் அருட்பா வுற்சவஞ் செய்து அருந்தவ மணியை வாழ்த்தினுர்கள். செந்தமிழுலகஞ் செய்த வந்தனைகளையேற்ற செந்நாப் புலவர் சென்னை சேர்ந்து கந்தசுவாமியார் வசந்த மண்டபத்தில் தணிகைப் புராணமும், சிந்தாதிரிப் பேட்டையில் கந்த புராணமும் திருவிளையாடற் புராணமும் பிரசங்கித்து வந்தனர்.

அநபாயச் சோழ மகாராசன் செய்த அருட்பா வுற்சவப் பெருங் கோலத்தை யிக்காலத்துள்ள மக்கட்குக் காட்டியிணையிலாப் பெரு மகிழ்ச்சி யெய்து வித்த பெரியாரைப் பெற்ருரும், உற்ருரும், சுற்றத்தாரும், பிறரும் சுதேசத்திற்கு வருமாறு திரு முகங்கள் விடுத்தனர். அவையிற்றைச் சென்னை நேயர்கட்குக் காட்டி 'சின்ஞள் நாமைப் பிரிந்து, ஏத்துவோர்க்கு எந் நிதியு மளிக்குஞ் சந்நிதி வேளைத் தரிசிப் பான் புலோலிக்குச் சென்று மீளுவல்' என விசைத்து அன்னவர்கள் பால் விடை பெற்று, அருந்ததியனைய கற்பரசி யாருடனும் புதல்வர்களுடனும் புறப்பட்டனர். இடையில் விடையரவாடும் சிதம்பரம், சீர்காழி, புள்ளிருக்கு வேளூர், திருக்கோலக்கா, திருச்செங்கோடு, திருமயிலாடு துறை, திருவாலவாய், திருநெல்வேலி, இராமேச்சரம் முதலிய

திருப்பதிகளிற் றங்கி யாங்காங்கேயுள்ள தீர்த்தங்களில் தோய்ந்து, மூர்த்திகளைக் கண்டு வணங்கி, அடியவர்கள் அன்பின்மேலீட்டாற் செய்த பணிகளை மணியென வேற்று அவர்கள் அகமகிழ்ந்து விழைந்த வண்ணம் அத்துவித சித்தாந்தம் மகோபந்நியாச மாரியைப் பிரமமேகம் போற் பொழிந்து, வீணுகான நகரை யடைந்தனர். அந்தணரைக் கண்ட அந்தணர்களும், ஆசிரியர்களும், அன்பர்களும் அருட்பா முழக்கத்துடன் எதிர் வரக் கதிரை வேலரும் கண்ணுதனும சங்கீர்தனஞ் செய்து, அவர்களுடன் கலந்து அவர் உபாசனு மூர்த்தியாம் உபயகதிர்காமப் பெருமான் அருட் கோயிலுட் சென்று உமைமகனை யுள்ளத் திருத்தி வணங்கித் தந்தையார் மந்திர மடைந்தனர். பலப்பலச் சைவசித்தாந்தத் திருக் கூட்டத்தினர் தத்தங் கோட்டங் கட்குத் தாளாண்மை மிக்க வேளாளரை யுபசாரத்துட னழைத்துத் திருவருட்பா வுற்சவங்கள் செய்து தீமையொழித்தனர். பற்பல விடங்களில் மாயாவாத தும்ச கோளரியைக்கொண்டு உபந்நியாசங்கள் செய்வித்தனர். அவ்வுபந்நியாசங்களைக் கேட்ட எங்குரு நாதரின் குருநாதர்களே 'எமதாசிரியப் பெருந்தகையாம் நாவலர் பெருமான் பிரசங்காமுதைச் சுமார் நாற்பது ஆண்டுகளாகச் செவிமடுக்காது வாடிய எங்கட்கு இற்றைய தினம் அஃதை யுபகரித்த தடங்கருணைப் பெருங் கடலாய சங்கரனருளை யெங்ஙனம் வியக்க வல்லோம்' என்று மகிழ்ந்து வியந்து புகழ்ந்தனரெனின், ஏனைய புலவர்கள் புகழ்ந்தமையை யீண்டு விரிக்கவும் வேண்டுமோ? ' போலியருட்பாப்'' பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டன சண்டமாருதம்'', ''சைவசித்தாந்த மகாசரபம்'' என்னும் அரிய பட்டங்கள் பெரியோராற் சூடப்பட்டன.

இணையிலாப் புலவர் பெருமான் யீழ நாட்டில் வாழுங்கால் வடிவேற் பிள்ளை பொலிஸ் நியாயாதிபதி புகன்ற தீர்ப்பு பிழையுள்ளதென்று சென்னை கைகோர்ட்டில் அப்பீல் எடுத்தனர். அதனைப் பத்திரிகைகளானும், கெழுதகை நண்பர்கள் விடுத்த கடிதங்களானும் அறிந்து சென்னை சேர யுன்னினர். திடீரென விசாரணை தொடங்கினர் அரசாங்

கத்து நியாயாதிபதிகளான கனம் பென்ஸன் துரை யவர்களும் கனம் மூர் துரை யவர்களும். வேதாக மோக்த சைவ சித்தாந்த சபையார் பிரமஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களையும், பிரமஸ்ரீ விஸ்வநாத சாத்திரியாரவர்களையும் கொண்டு வாதித்த, சென்னை பொலீஸ் கோர்ட் தீர்மானம் குற்றமற்ற தென்று (21-11-05) வழக்கைத் தள்ளிவிட்டனர் நீதிபதிகள். சபையார் உடனே தஞ்சபாநாயகர்க்குத் தந்தி யடித்தனர். இவ்விரண்டா முறை வெற்றியைக் கேட்ட ஏதமிலார் 'கதிரைவேல் காட்டிலிருந்தாலென்னை? நாட்டிலிருந்தாலென்னை? வீட்டிலிருந்தாலென்னை? இவ் வழக்கிற் கவரோர் முன்னிலைச் சுட்டேயன்றி மூலகாரண ரல்லர். முழுமுதற் பொருளே இவ்வழக்கிற்குப் பிரதிவாதி' என்னுள்ளெழுங் காதன் மீதிட்டான் மொழிந்தனர். ஹைகோர்ட்டினும் வெற்றிபெற்றதை யறிந்த கொற்றவர் சமயாசாரிய சுவாமிகள் திருவருளை யுன்னி யுன்னி ஆனந்த வுரு வாயினர். சென்னைச் சிவனடியார்களைக் காணப்பேர வாக் கொண்டு யீழ நாடு விடுத்துத் திருவாவடுதுறை யடைந்து விடையவனை வணங்கித் திரும்புகையில் ஸ்ரீ பண்டார சந்நிதிகள் விழைந்தபடி 'சந்தான பரம்பரை' யென்னும் அரிய விடயத்தை யுபந்நியசித்துப் பரிசும் பெற்றுச் சிதம்பரமடைந்து சின்னுட் பல்பிணிச் சிற்றறிவினர்களுய் வான் கற்றைச் சடையசையக் கால்தூக்கிக் கருணை நடஞ் செய்யும் பெருவாழ்வைக் கண்டு தரிசித்துப் பன்முறை வணங்கிச் சென்னை நண்ணினர். பானுவைக் கண்ட பங்கயம் போல பன்னிரு திருமுறைச் சபையினர் முதலியோர் முகங்கள் மலர்ந்தன.

## வாடா வஞ்சியில் வாழ்ந்த சிறப்பு

உடல் பொருளாவி மூன்றையும் உத்தமச் சித்தாந்த சைவத்திற்காக அர்ப்பணஞ் செய்த அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், கந்தநாதன் செந்தாண்மலரை யல்லும் பகலும் சிந்தைலிருத்திப் பழைய சைவப்பிரசங்கங்கள் பல செய்து கொண்டு வாழ்வாராயினர். கதிரை வேலவனார் அங்ஙனம் வாழுங்கால் கடைச் சங்கத்தி லரங் கேற்றப் பட்ட சிலப்பதிகாரத்தைச் செய்த இளங்கோவடிகள், அச்

சங்கப் புலவராயிருந்து கவியரங்கேற்றிய கோவூர்க்கிழார், கருவூர்க் கிழார், ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியத் திற்கோ ருரைகண்ட சேனாவரையர் முதலிய செந்தமிழ் மணிகள் வதிந்த வாடாவஞ்சியாங் கருவூரிலே கனம் கிளேடன் (Rev. Clyton) துரையவர்கட்கோர் தமிழ்ப் பண்டிதர் வேண்டியதை யறிந்து, அத்துரையவர்கட்கு விண்ணப்பப் பத்திர மனுப்பினர். அஃது துரையவர்களால் அங்கீகரிக்கப் பட்டது. சென்னைச் சிவநேயர்கட்குப் பலதேறுதல்கள் கூறிக் காரிகையுடனுங் கன்னியுடனுங் கருவூரை யடைந்த னர். மூன்று மதிக்குள் எமது சபை யிரண்டாம் வருடோற் சவம் நெருங்க அவ்வுற்சவத்தை யுற்சாகமாய் நடத்த அவ ணின்று சென்னையணைந்து பன்னிரு கரத்தோன் பக்தஜன சபையின் வருடோற்சவத்தை யினிது நடாத்தி எறிபக்தர் வாழ்ந்த எழிலூர்க்கு மீண்டனர். உத்தியோக காலமொழிந்த மற்றக் காலங்களில் தமிழ் வளர்க்கும் பெருமான் சிவ ஞானபாடியத்திற்குச் சிறந்த குறிப்புக்கள் வரைந்துகொண் டிருந்தனர். அஃதுமன்றிச் சுப்பிரமணிய பராக்கிரமமென் னும் ஒரரிய நூலும் பெரியராலாக்கப்பட்டது. சிவஞான சுவாமிகள் பவஞானமழிக்கும் வியாக்கியானங்களினுண்மை கற்றோர்க்கன்றி மற்றையோர்க்குத் தெற்றெனப் புலப்ப டாவாகலான், அவையிற்றைத் திரட்டி, யாவர்க்கும் பயன் படுமாறு எளிதான தமிழ் நடையில் தெளிவாக எழுதினர். அஃதியாவர் பாலடைந்துள்ளதோ அறியேம். ஆறுமுகனே யறிவான். வேனிற்கால விடுமுறை நாள் உறவே, இல்லா ளுடன் கல்லாரல்லா நல்லார் கருதுங் கதிரை வேற் பிள்ளை சென்னை யடைந்து, பன்னிரு திருமுறைத் திருவருட்பாப் பாராயண பக்த ஜன சபையின் பிரதம வருடோற்சவத் தைப் பெற்றி யாய் நடத்தி, மருட்பா மறுப்பின் வழக்கில் அவருக்காக வாதித்த வாசால நியாய துரந்தர சிகாமணி யாம் விசுவநாத சாத்திரியாரவர்கட்கு ஞாபக சின்னமாகச் சில சன்மானங்கள் செய்து பூவாவஞ்சி யெனப் புலவர் புகழ்ந்த கருவூர்க்கேகினர்.

அத்திருப்பதிக்கணுள்ள பக்தர் குழாங்கள் பண்டித சிரோன்மணிபாலனுகி "இனிக் கருவூரா வண்ணங் கருவூ

ரில் வதியுங் கண்மணியே இத்தல மான்மியத்தை யெவரும் எளிதல் தெளியுமாறு கத்தியமாகச் செய்ய வேண்டு'' மென வேண்டினர். அவர் வேண்டு கோளுக்கிரங்கிய வேள டியார் ''கருவூர் மான்மியம்'' என்னுமோர் பனுவலியற் றிப் பசுபதீச்சுரப் பெருமானார் திருக்கோவில் கும்பாபி டேகதினத்தி லரங்கேற்றினர். அம்மான்மியத்திற் செம் மான் மருகன் செம்மலர்த் தாளைக் கருதுங் கதிரை வேற் கழறிய கவிகள் பலவுள வேனும், அவையிற்றுள் இரண்டு சிலேடைச் செய்யுள்களைச் சிவனடியார்கனிக்க ஈண்டுக் காட்டுதும்.

எறிபத்த நாயனார்க்கும், கவூர்க்கும், ஆம்பிரவதி நதிக்கும், சிவபெருமானுக்கும், விநாயகக் கடவுளுக்குஞ் சிலேடை.

## ஐம்பொருட் சிலேடை

பரசு கொளலாற் பவானியிட மார்ந்து
விரவுநலி தீர்த்தலான் மேற்பணியால் வஞ்சி
யறியத்தம் பத்தத்த னுறுமுனோ னன்ன
வெறிபத்தன் தாள்பணி வோமே.

கும்பாபிடேகத்திற்கும், கருவூர்க்கும், ஆம்பிரவதி யாற்றுக்கும் பசுபதிசப் பெருமானுக்கும், பிரமனுக்கும் திருமாலுக்கும், தமிழ்க்கும், ஆரிய வேதத்திற்கும், தமிழ் வேதத்திற்கும் சமயகுரவர்க்குஞ் சிலேடை.

## பதின் பொருட் சிலேடை

வாரம் வரலால் வருகுவனங் கோடலாற்
சாரஞ் செறிதலாற் சார்கதியாற் — சீரகரு
வூரா றரனயன்மாக லொண்டமிழ்வே தங்குரவர்
நேராங் கும் பாபிடேக நேர்.

இச்சிலேடைச் செய்யுள்களைக் கண்ட கருலூர்ச் சிலேடைச் சிங்கமும் பிள்ளையவர்களை யுள்ளிற் போற்றியது. கருலூர்த் தேவர்க்குப் புராண சாரஞ் செய்யுமாறு வேண்டிய தாண்டவ மூர்த்தியினடியவர் களிக்க ஓர் விருத்தமுஞ் செய்தனர். கருலூர்க் கனவான்களும், தனவான்களும் கதிரைவேற்பிள்ளைக்குக் கெழுதகை நண்பராயினர். அலுவலொழிந்த காலந்தவிர மற்றைய நேரங்களில் கற்றைச் சடையான் நெற்றியிற் றேன்றிய வெற்றி வேற் குகன் றளை யகந்தாங்கி யவதானப் பழக்கங் செய்து கொண்டு வாழுங்காலே, யவர் மனைவியார் வடிவாம்பிகை யோர் ஆண்மகவின்று, சிவநாம முச்சரித்துக் கொண்டே சச்சிதானந்த சிற்சோதியிற் கலந்தனர். அஃதும் எஃக வேலன் திருவருளாமென வுன்னிச் சுதையையும், சுதனையும் தம்மைப் பெற்றோர் பால் சேர்க்க வேண்டுமெனத் தீர்மானித்து, யாழ்ப்பாணம் நோக்கினர். மத்தியிற் திருச் செங் கோட்டிற் றங்கி "அரனே யறுமுகன்" என்னுமரிய உபந்நியாச மாரி பொழிந்தனர். அதைச் செவிமடுத்த அடியவர்களடைந்த ஆனந்தத்திற் கோர் வரம்பின்று. மூன்று நாள் அத் திருப்பதியில் பத்தியாயிருந்து பின்னர் வேளாளர் வாழும் வீணகான புரமடைந்தனர்.

ஆங்கே இருமொழிக் கடலையும் பருகி யேப்பமிடும் புலவர் பெருமான்கள் முன்னர், சந்நிதி வேள் ஆலயத்தினும், புலோலி பசுபதீச்சுரப் பெருமானுர் ஆலயத்தினும் பிள்ளையவர்களால் சோடசாவ தானமும், அட்டாதசாவ தானமும் செய்யப்பட்டன. இங்ஙனஞ் சிவநாதனருளால் அவதானஞ் செய்த தவநாதரைப் புநர் விவாகஞ் செய்து கொள்ளுமாறு பெற்றோரும் மற்றைய யோரும் வேண்டினர்கள். அன்னவர் முக நோக்கி, "அன்புடையீர்! யான் சென்னைக் கேகிச் சொன்னயமுடைய நன்னயச் சிவநேயர்கள் வரம்பிலா இறும் பூ தெய்தும் வண்ணம் சதா வதானஞ் செய்து மீண்டும் நுங்களைக் காணச் செங்கை வேலன் திருவருளிருப்பின், புநர் விவாகஞ் செய்து நும்மைப் புளகம் போர்ப்பச் செய்வல்" என்று மொழிய, தந்தையும் துணைவரும், குரவர்களும் நாவுலர்ந்து மறு மொழி பகர

வும் வாயெழாது நீர் நிரம்பிய கண்ணுடையரானார்கள். தஞ் சோதிடத்தையவர்க்குக் காட்டி,

"முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினு
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்"

என்ற வான்றோர் அமுதத் திருவாக்கின் படி விதியை மதியிலேன் எங்ஙனம் வெல்லுவேன்; மாயமாம் வாழ்வை மெய்யெனக் கொள் வரன்றோ மயங்க வேண்டும்; முருகனருள் விட்டவழி நடக்கும், அஞ்சற்க" என்றுபல வுறுதி மொழிகளை உற்றார் முதலி யோர்க் குரைத்து கொண்டிருந்தனர். அது போது கருவூர்த் துரையவர்கள் கதிரை வேற் றுரையை நீலகிரிக் குன்றூர்க்கு வருமாறு கடிதம் விடுத்தனர். யாமும் எமது சபையின் மூன்றாம் வருடோற்சவத்தை முரணுது முற்றுப் பெறுவிக்கச் சென்னைக்கு விஜயஞ் செய்யுமாறு கடிதம் வரைந்தோம். அவ்விரண்டு கடிதங்களையும் தங்கரந்தாங்கி உடன் தோன்றிய உத்தமியை யருகழைத்து "அம்ம! எனது புதல்வியாயசிவஞானம்பிகையையும், புத்திரனைய திருநாவுக்கரசரையும் நுஞ்செல்வர்கள் போல பாதுகாத்தல் வேண்டும். யான் சென்னை சென்று பின் குன்றூரில் சில நாள் தங்கி மீளுவல்" என்றுரைத்து, அவர் மாட்டுச் சிறுமியையும் சிறுவனையும் ஒப்புவித்துச் செல்வியை நோக்கித் திலகவதியே! நின்னருமைச் சகோதரன் திருநாவுக்கரசைப் பத்திரமாயப் பாதுகாக்கவும். யான் ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் மூன்றாம் வருடோற்சவத்தை யினிது நடாத்திச் சதாவதானஞ் செய்யச் சென்னைக்குப் போகின்றேன்" என்றுகூறி விடை பெற்று வெளிக்கிட்டனர் வேலர்.

## ஜயாற்றைக் கண்டறுமுகன் சபை சேர்ந்தது

தாண்டக வேந்தர்க்குத் தண்கையிலைத் தனிக் கோலத்தைத் தற்பரசிவம் சிற்பரை யோடருளப் பெற்ற பஞ்சநதத்தைப் பார்க்கப் பண்ணளாக வுள்ளத்தெழும் பேரவா

வானது பிடர்பிடித்துந்த, மிடியிலார் இடையிற் புகைவண்டி விட்டிழிந்து, திருவையாற்றை நோக்கிச் சென்றனர். இல்லையில் இரண்டாமுறை யுற்சவஞ் செய்த நல்லை நாவலர் மாணவரின்மாணவர் வரவைக் கேட்ட வள்ளலடி யார்கள் வரம்பிலா இறும்பூ தெய்தி ''எங்கள் தவமே, தவம்' என்றியம்பி, ஆலய அரசுவாக்கன் மீது கதிரை வேற்கு வந்தனோபசாரங்கள் செய்தனர். அவ்வடியவர்களுடன் அகம் பிரமவாதக் கரிகளை யழித்த அரியும் ஐயாற்றுப் பெருமானையும், பெருமாட்டியையும் தரிசித்து ஆனந்த வுருவாயது; பின்னர் சிவவுருவாய் விளங்கிய சித்தாந்தச் செல்வர்கள் விழைந்தபடி சைவசித்தாந்த மகா சரபம் அத்திருத்தல மான்மியத்தை யுபந்நியா சித்தது. மீண்டும் ஆலயத்தைக் கண்டு வணங்கிவுண்மைச் சிவனடியார்கள் பால் விடை பெற்றுப் புகைவண்டியேறிப் புண்ணியர் வாழும் கண்ணியச் சென்னை சேர்ந்தனர். அடுத்த நாள் (17-2-07) வருடோற்சவம் தொடங்கப் பெற்றது. அன்று காலை குன்ற வில்லேந்திக் குறு நகையால் திருபுரமெரித்த விரிசடைச் சுந்தரேசர்த் சுந்தர வாலயத்தி லெழுந்தருளியுள்ள கந்தனும் எந்தைக்கு அந்தணர்களைக் கொண்டு ஆகமவிதி ஒரு சிறிதும் வழாது அபிடேக அலங்காரங்கள் செய்வித்துச் சிங்காரவேலரைத் தங்க விமானத்தி லெழுந்தருளுவித்துத் திரு வீதி மகோற்சவம் நடத்தப்பட்டது. பூதியணிந்த வேதியர்கள் சிவநாம சங்கீர்த்தனைச் சந்தடியும், பலப்பல சைவ சித்தாந்த சபைகளின் தமிழ் வேத பாராயண முழக்கமும், வாத்திய கோஷமும் பேட்டை யெங்கணும் செவிடு படுத்தின. மரகத மயூரன் பின் மறை யோதி வந்த இறையடியார் குழுவில் கதிரை வேலர் அன்று விளங்கிய மேன்மையை என்னென்று விரிப்பேம். மாலயனிந்திரன் மற்றைய வானோர் முனிவர்கள் போற்றக் கயிலையங்கிரியில் வீற்றிருந்தருளும் கங்காதரனே யெனக் கண்டோர் கழறவிலங்கினர். இங்ஙனம் எழுந்தருளிய பெருவாழ்வைக் கண்ட நம் பேட்டை வாசிகள் கதிரோனைக் கண்ட கமலம் போல் அகமுக மலர்த்து, தத்தமில்லங் கடோறும் பத்தியாய்க் கதலி விருட்சங்களும், கேதனங்களும், பந்தர்களும் தோரணங்களும் நாட்டிப் பூரியரல்லாச் சீரியர் புகழும் புனிதக்

குரவர்க்குப் பூமாலை சாத்திப் புளகம் போர்த்தனர். அன்பர்கட்குச் சர்க்கரை, கற்கண்டு, கனிவகைகள் வழங்கப்பட்டன. மகோற்சவம் முற்றுப் பெற்றவுடன் வெற்றி வேலர் மாலையை எமது வெற்றி வேலர்க்குச் சூட்டி, வாத்தியக் கோஷ்த்துடன், திருவருட்பா விஜயநாமாவளி முழக்கத்துடனும் சபாகிருகத்துக்குச் சென்றனர், பால சுப்பிரமணிய பக்தர்கள். ஆசிரியர் அறுமுகன்சபையடைந்து ஓர் அரும்பீடத்தில் அமர்ந்ததும், அவரடிகளை முடிமேலணிந்தனர் மிடியிலா மேதாவிகள். பிற்பகல் மகேஸ்வர பூசை நடந்தவுடன், கூடிய பெருஞ் சபைக்கும் அக்கிராசனம் வகித்து வருடோற்சவத்தைச் செவ்வனே நடத்தினர். அன்றிரவு இராயப்பேட்டைக் கணுள்ள செல்வர்களை யழைப்பித்து ''அன்புடைச் செல்வர்காள்! இற்றையத் தினம் இவண் நடந்தேறிய யுற்சவத்தின் மாண்பை யெம்மாலெடுத் தியம்பற் பாலதன்று; இங்ஙனம் பிரதியாண்டினும் நடத்த வேண்டியது நுங்கடமை. சபைக்கு மண்டபம், மணி, முதலியன இல்லாதிருத்தல் பெருங்குறைவாயுள்ளது. அவையிற்றை விரைவில் பூர்த்தி செய்து சபைக் குபகரிக்க வேண்டுவ தூஉ நுங்கடமை'' என்று மொழிந்து, அங்கத் தவர்களை நோக்கி'' நான்காம் வருடோற்சவத்திற்கு அக்கிராசனம் வகிக்க நாயகன் எவரை விதித்துளனோ அறியேம்'' என்று கலங்கு முளத்தராய்க் கரைந்து, சிந்தாதிரிப் பேட்டைக்குச் சென்றனர், கதிரேசற் பிரியாக் கதிரை வேலர்.

## சதாவதானஞ் செய்த மாட்சி.

அடுத்த ஆதிவாரம் (24.2.07) சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் ஆடக மன்றுடிக் குமரனுல் குன்றுடித் திருவடிக்கண் இடையறுப் பேரன்பு வாய்ந்த பிள்ளையவர்களாற் சதாவதானஞ் செய்யப்படுமென வேதாகமோக்த சைவ சிந்தாந்த சபையார்களால் பத்திரிகைகள் பரப்பப்பட்டன. அவையிற்றைக் கண்ட அன்பர்கள் 12 மணிக்கே நாடக மண்டபத்திற்கு விஜயஞ் செய்தனர். அம்மகா சபைக்கு அத்தியாச்சிரம பால சரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞான

னந்த சுவாமிகள் அக்கிராசனம் வகித்தார். அப்பேரவையில் வீற்றிருந்த முத்தமிழ்க் கல்வி நிரம்பப் பெற்ற முதியோர்கள், ஆரியக் கலைகளில் வல்ல ஆரியர்கள், ஆங்கிலப் பாடையிற் றேறி வித்தியா பட்டங்கள் பெற்ற வக்கீல் சிகா மணிகள், கணித சாத்திரிகள், இன்ஸ்பெக்டர்கள், எட்மாஸ்டர்கள் முதலிய பண்டிதர்கள், அவதானப் பரீட்சைக்காக ஏற்பட்டனர்கள். அவ்வித்துவ மணிகள் பொறித்த வினுக்கட்கு மாயாவாத தும்ச கோளரியவர்கள் வேலுமயிலுந் துணை, வேலுமயிலுந் துணை என்னுந் திருநாமத்தை முழக்கிக் கொண்டு, தகுந்த விடைகள் விளம்பினர். அவ்விடைகளைக் கேட்ட அவதானச் சோதனைக் கர்த்தர்களும், அக்கிராசனரும் அவதானியைப் புகழ்ந்ததை யீண்டு வரையப்புகின் நீண்டு விடுமெனக் கருதி விடுக்கின்றேம்.

அவதானப் பரீட்சகர்கள் கடாவிய விஞக்களையும், அவரவர் அபிதானங்களையும், அவைகட்கு அவதானச் சிங்கம் அளித்த விடைகளையும் இவண் விரிக்கிற் பெருகுமாயினும், அவையிற்றின் ஓர் பாகமாய கவிபேதங்களை மாத்திரம் புவியுள்ளார் களிக்க ஈங்குக் காட்டுதும்.

பரீட்சகர்: திருமயிலை வித்துவான் வெள்ளியம்பல வுபாத்தியாயர் குமாரர் சேமசுந்தரம்பிள்ளையவர்கள்.

விஞ: கபாலிக்குளத்தில் பூ சரஞ்சரமாய் விழுக் கொதித்தது சுட்டது எனும் பொருள் தரக் கலித்துறையிற் பாட வேண்டும்.

விடை: உள்ளத்திற் றுயருறும் வானவர் காமனை
வுந்தவன்ஞன்
களத்திற் கரமுறுங் கபாலி முன்னெரு
கன்னல் வில்லா
லுழக்கச் சரஞ்சரமாய்ப்பூ விழப்பதி லாய
யத்துக்
குளத்தில் நெருப்புக் கொதித்தது சுட்டது
குற்ற மன்றே.

(ப—ர்) : காஞ்சிபுரம் பி. செ. முருகேச முதலியா ரவர்கள்.

வி௵: முருகனுக்கும், நவவீரர்க்கும், காஞ்சிக்கும் சிலேடையாய் மு வென் றெடுத்துக் கு வென முடியும் நேரிசை வெண்பாவாகப் பாடல் வேண்டும்.

விடை: மூவாத தன்மையினுல் மோகத்தை நீக்குதலால்
காவார வைத்தலால் கண்ணுதலிற் — லூவார
நிற்றலால் வேன்முருக ணேரி வைவீரர்
சொற்காஞ்சி நேரெனவே சொல்கு.

(ப—ர்) : மயிலே அரங்கசாமி நாயக்கர்.

வி௵: கோலம் எனத் தொடங்கி, பார் என முடியும் ஓர் நேரிசை வெண்பாவில், சைவ சித்தாந்தத் தாலன்றி முத்திகிடைக்காதென்னும் பொருளை யடக்கிப் பாட வேண்டும்.

விடை: கோலஞ்சேர் சைவமெனுங் கொள்கை யரங்கப்பேர்
மேலுமோர் சாமியைச் சேர் மேவலனே — ஞாலமதில்
சித்தாந்த ஞானஞ் சிறந்ததன்றி யெவ்வுயிர்க்கும்
பத்தி முத்தி சேராநீ பார்.

(ப—ர்) : யாழ்ப்பாணத்துத் தெல்லியம்பதி இராசரத்தினம்பிள்ளையவர்கள்.

வி௵: சபாமண்டபப் பெயரும், மாசி கார்த்திகை யாயிற்றென்றும், பசு புலியைத் தின்ற தென்றும் சொற் பொருட் பின்வரு நிலையணி யமைத்து 'ச்' எனத்தொடங்கி 'ஏ' எனமுடியும் ஆசிரியப் பாவாகப் பாட வேண்டும்.

விடை: சந்தமா ரிலக்குமி விலாச மென்னும்
இந்தநன் மண்டபத் திருந்திடும் புலவருள்
நூலறி தகுதிய நுவலுவ கேண்மோ
இறும்பூ தன்ன வியலுறாஉம் பல்கால்
வாண்பொய்த் திமங்கடுத் துறலா லிந்த
மாசியென் மதியுங் கார்த்திகை யாமே
புலிப்பூண் டுதைமான் பொதுவிக ரத்தால்
புலிவெளிப் படுத்துப் புலிக்கூட் டடைத்த
புலியைப் புலியால் வாங்கி யோர்பசு
தின்றதோ புதுமைத் தின்றியல் பறிதியே.

(ப—ர்) உரையாசிரியர் கா. ஆலாலசுந்தரம் பிள்ளைய வர்கள்.

வினு: சிவபெருமானுக்கும், அவதாளு சபைக்கும், சமுத்திரத்திற்கும் சிலேடையாய், மூன்றும் அடியில் சைவசித்தாந்தக் கருத்துடையதாய், 'சங் கப்புலவ' என்றெடுத்து 'ர்' என முடியும் ஓர் நேரிசை வெண்பாவாகப் பாட வேண்டும்.

விடை: சங்கப் புலவமணி சார்தலாற் றத்துவத்தால்
தங்கக் கலை மதியஞ் சார்தலாற் — றுங்கமதாற்
பேராற் சதசத் தடக்கலாற் மெம்மானும்
நேரவையும் வேலையுமே நேர்.

## நீலகிரிக்கேகி நீலகண்டராயது.

சண்முகனருளாற் சதாவதானஞ் செய்த சைவ சித்தாந்த மகா சரபஞ் சீதளத் திரு நோக்கத்துடன் நீலச் சிகியோன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள நீல கிரிக் குன்றூர்க்கேகி யுத்தி யோகத்தை யேற்றுக் கொண்டது. அத்திருப்பதிக் கணுள்ள பத்தர்களாம் வித்துவ சிரோன்மணி சொக்கலிங்கம் பிள்ளை முதலியோர், ''ஈழ நாட்டிற்றேன்றிச், சோழநாடு முதலிய தமிழ் நாடுகள் வாழத் தெய்வத் திருவருள் கைவந்து கிடந்த சைவத்திருவாளர்களருளிய திருமுறைகளின் மாண்பைக் கலிமிக்க இக்காலத்தில் இராசாங்கமேறி வலியுறுத்திய

பெருமான் நம் நீலகிரிக் கெழுந்தருள நாம் புரிந்த புண்ணிய மென்றோ?'' என விசைத்துக் குதிரை வேலர் பாலணைந்தார்கள். அன்னவரைக் கண்ட மன்னர் நன்னய மாக ''நண்பீர்! சைவ சித்தாந்த சபையொன்று தாபித்தல் வேண்டும்; அச்சபையில் சைவ புராணப் பிரசங் கங்கள் நடைபெறல் வேண்டும். இங்கேயுள்ள குளிர் காற்று நந்தேகத்திற்குத் தீங்கு நிகழ்த்துமெனக் கருதுகின்றோம்; இரண்டு மதிக்குள் இவண் குளிர் முகத்துடன் உலவும் வாயு பகவான் எமக்கு நேயனுவனேல், நுங்கண்முன் சதாவ தானஞ் செய்து காட்டுவல்.'' என்றியம்ப, பூதியணிந்த புண்ணியர்கள் ''சோதி போல் தாங்கள் சொற்றபடி இப் பங்குனி மதி கழிந்தவுடன் வருடப் பிறப்பன்று அடி யேங்கள் ஓர் சபை தாபிக்கின்றேம். மத்தியில் இளையான் குடிமாற நாயனுர் புராணத்தை பிரசங்கிக்குமாறு பிரார்த் திக்கின்றேம்'' எனக் கூறினுர்கள். அத்துவித சித்தாந்த மதோத்தாரணர் அவர்கள் வேண்டு கோட்கிணங்கி பிர சங்கித்து வந்தனர். அந் நாயனுர் பெருமான் அருமைத் திருப்புராணம் முற்றுப் பெறுவதற்குள் வெங்குளிர் சுரம் எங்குரு நாதரைத் தாக்கியது. சொக்கலிங்கம் பிள்ளை யவர்கள் நாவலர் பிரஸிலுள்ள ஸ்ரீலஸ்ரீ சதாசிவம் பிள்ளை யவர்கட்குத் தந்தியடித்தனர். கிளேடன் துரை சிந்தாதிரிப் பேட்டைச் செல்வர்க்குத் தந்தி கொடுத்தனர். சுரநோயாற் பீடிக்கப்பட்ட அக் காலத்தும் அவரைக் காணவந்த பெரி யோர்கட்குச் சிவ மான்மியங்களையே எங்குரவன் போதித் தனரெனின், அன்னவரின் தவப் பெற்றியை யறிவிலி யெங்கனம் வகுப்பேம். என்றும் நோய் கண்டறியார் நோய் கண்ட ஐந்தாம் நாள் தந்நண்பராய, சொக்கலிங்கம் பிள்ளையையும், அவர் தமயனுரையும் அருகழைத்து, நடை பெற வேண்டிய இலெளகிய விடயங்களைச் சில மொழிந்து, இருவையாற்றிற் கயிலாய தரிசனத்தைத் தாண்டவ மூர்த்தி காட்டியகாலை தாண்டக வேந்தரருளிச் செய்த ''மாதர்ப் பிறைக் கண்ணி யானை'' என்னும் அருட் பதிகத்தை யோதி அருகிருந்த அரனடியார் களிக்கப் பொருளும் விரித்துப் பராபவ ஸ்ரீ பங்குனி மீ 13 உ செவ் வாய்க் கிழமை மக நட்சத்திரங் கூடிய துவாதசித் திதி

யிலே, அகண்டாகாரப் பொருளாஞ் சிவத்துட னிரண்டறக் கலந்தனர். தந்தி சமாச்சாரங்கள் தமிழுல கெங்கணு முலவின. சென்னைச் சிவநேயர்கள் யாவரும் ஸ்ரீ கபாலீச்சரப் பெருமானுர் கண்டிகையுந் திருநீற்றையும் பொளாக் கொண்ட அறுபான் மும்மை நாயன் மார்களுடன் திரு வீதி வலம் வந்து, திருக்கோயிலுட் பிரகாரத்தைச் சுற்றுந் திருக்கோலத்தைத் தரிசித்துக் கொண்டிருந்த காலை, சென்னைக்குக் கதிரைவேலர் கபாலீச்சுரருடன் கலந்தார் என்ற சமாசாரம் எட்டியது. கபாலீசா, கபாலீசா, என்னுஞ் சந்தடி கதிரைவேலா, கதிரைவேலா எனமாறியது. தொண்டை நாடு, பாண்டிய நாடு, சோழநாடு, ஈழநாடு முதலிய நாடுகள் துக்கசாகரத்தி லாழ்ந்தன. தகனகிரியையும் அத்தி சஞ்சயன மும்குன்றாரில் நடைபெற்றன. அந்தியேஷ்டி முதலிய கிரியைகள் யாழ்ப்பாணத்திலே நடந்தேறின. அக்க மணியையும், அருணீற்றையும் அன்புடனணிந்து, பன்னிரு முறைகளைப் பாராயணஞ் செய்யும் பக்தஜன சபையார்கள்கதிரை வேற்பிள்ளையவர்கள் அற்புதத் திருவுருவப் படங்களைத் தந்தம், சபைகளினும், இல்லங்களினுந் தாபித்து, மெய்ப்பத்தியுடன் பூசித்து வாழ்கின்ருர்கள்.

## வாழி விருத்தம்.

சன்னிரு முறைகள் வாழ்க பாரினி லவற்றின் மேன்மை
சொன்னநற் கதிரை வேலெஞ் சுந்தரக் குரவன் வாழ்க
வன்னவன் நூல்கள் வாழ்க வருஞ்சபை பலவு நங்கள்
பன்னிரு புயத்தோன் பால பகவனுர் சபையும் வாழ்க

கதிரை வேற்பிள்ளையவர்கள் சரித்திரம் முற்றுப் பெற்றது

கதிரை வேலன் கழலிணை வாழ்க.

சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளையவர்கள்
மாணவரும் சென்னை இராயப்பேட்டை
ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபை நிர்வாகசபையாரு
ளொருவருமாகிய

# திருவாரூர்

## வி. கலியாணசுந்தர முதலியா ரவர்கள்

இயற்றியது

### கலிவெண்பா

மாதவனும் வேதியனும் வானவருந் தானவரு
மாதவரு மானுடரு மற்றவரு - நாதவென
நின்றுதுதி நின்மலனார் நீட்சிலைமா மேருவெனுங்
குன்றத்தி னேர்முடியாங் கோணவரை - நன்றிமிகு
நீதிநூல் வல்ல நிபுணர்வாழ் கேதீச
மாதிதிரு வாலயங்க ளாங்காங்கே - சோதியா
யோங்கீழ நாடதனி லொப்பில்வேற் சந்நிதிவேள்
பூங்கந்த வெற்பொத்த பொற்கோயில் - தாங்குமொரு
மேலைப் புலோலியெனு மேலோர் பொழிபதியி
லாங் குலம்புரிந்த நற்றவமும் - சீலமிகு
தென்னாடும் பொன்னாடுஞ் செந்தமிழு மாரியமும்
மெந்நாடுஞ் செய்தவமு மேகியொன்றாய் - மன்னாடு
நாகப்பர் நற்றவத்தி னன்மறையின் சீர் விளங்க
வாகமவாய் மைவிளங்க வாரியையோர் - பாகரு
ளோங்கு திருமுறையி னுண்மையெல் லாம்விளங்கப்
பாங்குறு சூதன் பகர்முதுநூல் - ஈங்கொலிக்க
வெள்ளை விடையூரும் வித்தக னரடியா
ருள்ள முவப்ப வுதித்தோனே! - வள்ள
லறக்கொடியோன் போன்ற வருட்குருவை நண்ணிப்
பிறப்பொழிக்குந் தீக்கையெல்லாம் பெற்றோய் -
துறந்தோர்சொல்
நல்லைநக ராறுமுக நாவலர்தம் மாணவர்பாற்
சொல்லுதமி ழாரியநற் றூமொழியில் - வல்லோர் செய்

கோதி லிலக்கணமுங் கூறு மிலக்கியமு
மோதிமய லீங்க வுணர்ந்தோனே! நீதிமிகு
சென்னைமா நன்னகர்க்குத் தியே மிருளொழிக்கத்
துன்னுகதி ரோனெனவே தோன்றியவா - நன்ன
கண்மணியாங் கண்டிகையுங் கண்ணன் றரித்தொழுகு
முண்மை விளக்கு முயராழ்வார் - வண்மைமிகு
வாய்மொழிக்கு மாறாக வாதந் தொடங்கியபல்
வாய்மையிலா வைணவர்தம் வாயடக்கித் - தூய்நீற்றி
னுண்மை யவரறிந்தே யுய்ய மறைவிதிக
டிண்மையாய்க் காட்டுந் திறலோனே! - மண்முகத்தி
னற்றவத்தோர் போற்றுமெழி னாயகரா னால்வரருள்
வெற்றியருட் பாவோதும் வித்தகரே - குற்றமிலாத்
தந்தைதாய் சுற்றந் தமைய னெனக் கருதிப்
பந்த வினைகளெல்லாம் பற்றறுத்தோய்! - சந்ததமு
நாங்களே தெய்வமெனுஞ் ஞாலக் கரிகளெலா
மேங்கியழிந் தோட வெதிரேறி - யீங்குப்
பிரசங்கக் கர்ச்சனைசெய் பேரரியே றென்றே
யரசாங்கத் தார்புகழ்ந்த வண்ணல்! - தரையின்மிசை
யத்துவித சித்தாந்த வஞ்சமயத் தாபகனென்
றுத்தமர்கள் போற்ற வொளிர்ந்தோனே! - புத்தமதப்
பித்தர் விடுத்த பிழைமலிந்த நூல்களையெங்
கத்தனடி யார்களிக்கக் கண்டித்தோய்! - அத்தியணி
யண்டர் பிராற்கினிய வந்தமிழை யுங்கடலை
யுண்டமுந் தோரு னுயர்ந்தோனே - பண்மொழியா
ளங்கயற்கண் ணம்மை யரசுபுரி மன்மதுரைச்
சங்கப் புலவத் தனிமணியே! - யிங்குள்ள
சுந்தர மாணவர்க்குத் தூயதமி ழின்னமுதைச்
சத்ததமு மூட்டுநற் சற்குருவே! - சுந்தரனார்
சாத்திரத்தி னுட்பொருளைத் தாரணியி லன்பருக்கு
மாத்திரைக்குட் சொல்லவல்ல மாண்புடையோய் -
நாத்திகர்க்கு

நாதன் சிவனெனவே நாட்டி யவர்முகத்திற்
பூதியணிந் தாண்ட புண்ணியனே! - கோதினர்தம்
பாக்களருட் பாவென்னும் பாமரர்தங் கொள்கைகளை
மாக்களுய்ய வேரறுத்த மாதவனே! - வீக்கத்தார்

நீதித்தலத்து நிறுத்திய வக்காலே
நீதிபல கழறி நீசரது - வாதம்
பரிதிப் பனியெனவே பற்றற்றுத் திராமுய்
விரித்த வருண்முறையே மேன்மை - யருட்பாவென்
றெம்பெருமா னன்பரெலா மெங்கணுமே போற்றிசெய
வும்பர்கள் வாழ்த்த வுறுதியாய் - வம்பில்லா
நீதி பதிவியக்க நேராக மேல்விதிகள்
சாதி யெனச் சொற்ற தூயோனே - கோதிலாத்
தில்லை திருக்காஞ்சி சிராப்பள்ளி தேவைநகர்
செல்வ மலி சென்னை சிவனெங்கோ - னல்லதிரு
வாலயங்கண் மன்னு வரும்பதிக ளில்வாழுங்
கோல மிகுவடியார் கூட்டமாச் - சீலமொ
டன்றுநின் பாலேகி யன்புடனே வாழ்த்தியொரு
வென்றியெமக் கீந்த விறலோனே! - யென்றுன்னைத்
தத்தம் பதிக்கழைத்துத் தங்க விமானத்திற்
றத்துவ வின்னருட்பா தாபித்துச் - சத்தியமாய்
வேதியரும் வாழ்த்தியதை வேழத்தின் மீதிருத்தி
வீதிவலம்வரவே வேழம்பி - ணுதியடி
யார்சூழுவி லாறுமுக வண்ணலெனக் கைகூப்பிப்
பாருளோர் போற்றிசைத்துப் பண்பாடச் - சீராக
வஞ்செழுத் தோதிவந்த வன்பரசே! - யம்பலவன்
செஞ்சொல்வே தாந்தத் தெளிவாகு - நஞ்சைவச்
செஞ்சாலி யோங்கச் செழும்பிர சங்கமழை
யஞ்சாது பொழியு மருண்முகிலே! - செஞ்சடையான்
றொண்டர் பெருமையெலாஞ் சொல்லச் சிவசபைக
ளண்டத் துறச்செய்த வாண்டகையே! - கண்டோர்
கருவூர்த னீக்குங் கருவூரிற் சின்னுள்
கருவூர்த்த னீக்கக் கருதிப் - பெருமானை
யுள்ளத்தாற் பூசித்துறுபாசம் விட்டிநின்ற
வெள்ளளவிலா நல்ல வெழின்முனியே! - புள்ளிமயிற்
செல்வன் றிருவருளாற் சென்னையினிற் செந்தமிழ்மாக்
கல்வி சிறந்த கவிஞரா - நல்லோர்மு
னோர்நூ றவதான முண்மையாய்ச் செய்துபுகழ்
பாரில்விரித் தோங்கு வித்த பண்போனே! - யேர்மிகுந்த
சீல வருணகிரிச் செந்தமிழ்ப்பா பெற்றுள்ள

நீல கிரிக் குன்றாரி னின்மலனே - நீலகண்டன்
செம்பொ னடிக்கன்பு செய்கணங் கள்கொணர்ந்த
வம்பொன்றே ரேறியுண்மை யன்பரெலாம் - வெம்பிநிற்கக்
கற்றோர் கதறக் கலைவாணி மோதியழச்
சுற்றத்தார் சூழ்ந்திரங்கச் சோதரனும் - பெற்றவனும்
வாய்கொட்டி வீழ்ந்தழவே வாடா வுளத்தரழத்
தாயிழந்து பாரிற் றவிக்கின்ற - சேயெனவே
யெஞ்சபையு மற்றனவு மேங்கியழ வேதமிலா
நெஞ்சரு நேயரு நின்றிரங்கத் - தஞ்சமென
வந்தவரைக்காக்கும் வண்கதிரை வேற்புலவா
தந்தைதா யில்லாத் தனிமுதலா - யந்தமு
மாதியு மில்லா வரும்பெருஞ் சோதியாய்
வேதவே தாந்த விரிபொருளாய்ப் - போதமாய்ப்
பெண்ணு ணலியாய்ப் பிறப்பிலியாய்ப் பேசரிதாய்
மண்ணீ ரனற்காற்று வானுகி - யெண்ணரிதா
யொன்றிரண் டென்னுத வோங்கொளியி லொன்றினையா
யென்றுமையாங் காண்பே மினி.

## நேரிசை வெண்பா

மெய்யருட் பாவெங்கே மெய்கண்ட நூலெங்கே
தெய்வீக நீறெங்கே செந்தமிழின் - மெய்யெங்கே
கந்தனடி போற்றுங் கதிரைவே லுவலநீ
யிந்தநிலத் தோன்றுயே லிங்கு

உன்போ லிலங்கணமு முண்மை யிலக்கியமு
நன்ஞான நூல்களுஞ் ஞாலத்தி - லென்றனக்குச்
சத்தியமாய்ப் போதிக்குஞ் சற்குரவர் வேறில்லை
பித்தனே யென் செய்வல் பேசு.

சங்கரனைப் போற்றிநிதஞ் சாக்கியரைக் காய்ந்து மன்னர்
சங்கந்தனை நண்ணிச் சார்மகத்தி - லங்கயிலைப்
புக்க கதிரைவேற் புண்ணியனைப் புன்னெஞ்சே
யிக்கால வாசகனென் றேத்து.

## கட்டளைக் கலித்துறை

மேலைப் புலோலி யெனும்பதி மேவிய வேலவனார்
காலைக் கதியெனக் கொண்ட கதிரைவேற் கண்மணிநீ
மாலையோர் பங்கன் மலரடி மன்னினை மற்றினியார்
வேலை நிலத்தெழி னால்வர்தஞ் சீரறை வித்தகரே.

சங்கரி கந்தனை யாள்பதிச் சங்கத் தனிப்புலவ
சங்கரி கந்தனைச் சூடரன் றாண்மலர்த் தங்கினையாற்
சங்கரி கந்தனை யேறெங் குமரனார் தாரகனைச்
சங்கரி கந்தனை யெஞ்சபை நாதன் சகத்தினியே.

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

தென்னாட்டுச் செந்தமிழே சிவநெறியோர் தவநெறியே
    திருவேதேனே
இந்நாட்டுப் புலவருக்குத் திருமுறையி னுண்மையெலா
    மெடுத்துக் காட்டிப்
பொன்னாட்டுப் புலவருக்குப் போதிப்பான் போந்தனையோ
    புலவ ரேறே
எந்நாட்டு முனக்கினிய குகச் சபையை மறந்தேகல்
    வழக்கோ சொல்லாய்.

முன்னாளி லெக்குரவற் கென்னபவஞ் செதேனோ
    மூட நாயே
னிந்நாளி லிளமையிலே யுனையிழந்து வாடுகின்றே
    னெந்தா யெந்தா
யெந்நாளி லுனைக்காண்பே னெழின்முகத்தைக் காட்டாயே
    யெங்கே சென்றாய்
மன்னாவோ மன்னாவோ மாநிலத்து மாணவரை
    மறந்தாய் கொல்லோ.

''எத்துயர மணுகிடினுங் குருபத்தி தவறாத
    வெழிலோ'' யென்று
''நத்திடும்யாப் பியல்பயிற்றும் பயனதனை யொருபாவி
    னாட்டி வாழும்

உத்தமநற் சுகுணத்தோய் கலியாண சுந்தரப்பே
றுற்றேற'' யென்றுஞ்
சத்தியனே யினியெனக்குக் கடிதங்கள் விடுப்பவரும்
சகத்திலுண்டோ.

## ஜெனன தினம் - கட்டளைக் கலித்துறை

பேர்பிர சோற்பதிப் பீடுறு மார்கழிப் பேசிருநான்
கார்பிர கற்பதி வாரமுற் பக்கந லைப்பிசியிற்
சீர்பிர சங்கம் பொழிகதி ரைவேற் சிறப்புடையோன்
சார்பிர மன்றரு வார்கடற் றுரணி சார்ந்தனனே.

## திருநட்சத்திர வெண்பா

பன்னு பரபவத்துப் பங்குனிப்ப தின் மூன்றில்
மன்னுமுதற் பக்கஞ்சேர் மாமாகத்தில் - மின்னு
கதிரைவே லன்றுதைக் கான்மலர்க்கீழ்ச் சேர்ந்தான்
கதிரைவே லுவலவன் காண.

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 3 | 1 | 19 | தெழும் | ளெழும் |
| 4 | 1 | 1 | மகோத்தாரணர் | மதோத்தாரணர் |
| 5 | 2 | 3 | யென்றே | வென்றே |
| 7 | 4 | 1 | காழிநகர்க் | காழிநகர்ச் |
| 8 | 2 | 2 | சிந்தாந்தி | சித்தாந்தி |
| 9 | 1 | 4 | திருக்கேதீசமுந் | திருக்கேதீச்சரமுந் |
| 9 | 1 | கடைசி | பிரசோற்பற்றி | பிரசோற்பதி |
| 10 | 1 | 7 | கடவுளில் | கடவுளின் |
| 10 | 1 | 23 | யவர்களான் | யவர்களாற் |
| 12 | 1 | 9 | புலோலிருகரின் | புலோலிநகரின் |
| 12 | 1 | 9 | சீர்த்தி | கீர்த்தி |
| 12 | 1 | 10 | சந்நிதியான்ருட் | சந்நிதியானருட் |
| 13 | 2 | 3 | மெதாசிரியப் | எமதாசிரியப் |
| 13 | 2 | 6 | அங்கனே | அங்ஙனே |
| 14 | 2 | 12 | பிரபந்தைச் | பிரபந்தச் |
| 14 | 3 | 2 | மண்டபதில் | மண்டபத்தில் |
| 16 | 1 | 14 | வாழ்ததி | வாழ்த்தி |
| 16 | 2 | 5 | எப். ஏ. | எம். ஏ. |
| 17 | 1 | 15 | உபயந் | உபந்நியாசம் |
| 18 | 1 | 5 | அருணூல்கட்டு | அருணூல்கட்கு |
| 18 | 2 | 9 | ஆதிவாரததினும் | ஆதிவாரத்தினும் |
| 18 | 2 | 15 | அப்பிசங்கா | அப்பிரசங்கா |
| 19 | 1 | 10 | தகர்க்தவரும் | தகர்த்தவரும் |
| 19 | 1 | 27 | மாற்றலாராய் | மாற்றலராய் |
| 19 | 1 | கடைசி | சித்தாங்க | சித்தாந்த |
| 21 | 4 | 6 | நாவவர் | நாவலர் |

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 22 | 1 | 23 | காழியிற் | காசியிற் |
| 23 | 2 | 24 | தனராய | தனயரான |
| 25 | 1 | 17 | நம்பிக | நம்பிச் |
| 25 | 1 | 21 | கோயிலியே | கோயிலிலே |
| 32 | 1 | 14 | காலமொந்த | காலமொழிந்த |
| 33 | 1 | கடைசி | கனிக்க | களிக்க |
| 33 | 3 | 3 | ஞறுமுனே | ஞறுமுகனே |
| 33 | 4 | 2 | பசுபதிசப் | பசுபதீசப் |
| 36 | 1 | 3 | நாவர் | நாவலர் |
| 37 | 1 | 5 | கோஷ்த்துடன் | கோஷத்துடன் |
| 38 | 3 | 2 | சேமசுந்தரம் | சோமசுந்தரம் |
| 39 | 2 | 2 | சிலோடை | சிலேடை |
| 39 | 3 | 2 | லூவார | பூவார |
| 41 | 1 | 29 | இலெனகிய | இலௌகிக |
| 42 | 1 | 4 | பொளாக் | பொருளாக் |
| 42 | 2 | 1 | சன்னிரு | பன்னிரு |

கதிரைவேற்பிள்ளை

கலா மன்றம்

பருத்தித்துறை